भारत का राजपत्र

# The Gazette of India

इंडिय अरसितழ्

असाधारण

**EXTRAORDINARY**

**சிறப்பிதழ்**

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

***பகுதி XV பிரிவு 1***

प्राधिकार प्राकारित

**PUBLISHED BY AUTHORITY**

**அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது**

नई दिल्ली, गुरुवार, 14 मेई, 1998/1920 सका

New Delhi, Thursday, 14th May 1998/1920 Saka

*புது தில்லி, 1998 மே 14, வியாழக்கிழமை, 1920 சக*

**Ministry of Law, Justice and Company Affairs**

Legislative Department, New Delhi

*சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம், சட்டமியற்றுத் துறை, புதுதில்லி*

The translation in Tamil of The Registration Act, 1908 (16of 1908), The Inflammable Substances Act, 1952 (20 of 1952) and The Prevention of Illicit Traffic in Narcotic Drugs and Psychotropic Substances Act, 1988 (46 of 1988) are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

பதிவுச் சட்டம், 1908 (16/1908), தீப்பற்றிக்கொள்ளக்கூடிய பொருள்கள் சட்டம், 1952 (20/1952), மயக்க மருந்துப் பொருள்களின் மற்றும் மனநிலைக்கு ஊறு செய்யும் பொருள்களின் சட்ட முரணான வாணிகத்தைத் தடுக்கும் சட்டம், 1988 (46/1988) ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன் மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973) இன் பிரிவு 2 இன் கூறு (அ) வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**[ Price : Rs. 35.00**

# பதிவுச் சட்டம், 1908

## (சட்ட எண் 16/1908)

[1908, டிசம்பர் 18]

ஆவணங்களைப் பதிவுசெய்தல் தொடர்பான செய்சட்டங்களை ஒருங்கிணைப்பதற்கானதொரு சட்டம்.

ஆவணங்களைப் பதிவுசெய்தல் தொடர்பான செய்சட்டங்களை ஒருங்கிணைப்பது உகந்ததாய் இருப்பதால், ஈங்கிதனால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுகிறது:—

### பகுதி I

### முன்னுரை

1. (1) இந்தச் சட்டம், பதிவுச் சட்டம், 1908 என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

(2) இது, ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்:

வரம்புரையாக: மாநில அரசாங்கம், மாவட்டங்கள் அல்லது நாட்டின் நிலப்பரப்புகள் எவற்றையும் அதன் செயற்பாட்டிலிருந்து விலக்கிவிடலாம்.

(3) இது, 1909 ஆம் ஆண்டு சனவரி முதல் நாளன்று செல்லாற்றல் பெறுதல் வேண்டும்.

2. இந்தச் சட்டத்தின் பொருளிலோ தறுவாயிலோ முரணாக எதுவும் இருந்தாலன்றி,— பொருள் வரையறைகள்.

(1) "சேர்த்தல்" என்பது, விவரிக்கப்பட்ட ஆள் ஒருவரின் குடியிருப்பிடம் மற்றும் விழைதொழில், வணிகம், படிநிலை மற்றும் மரபுமதிப்புப் பெயர் (ஏதேனுமிருப்பின்) என்றும் 'இந்தியர்' ஒருவருக்கான நேர்வில், அவருடைய தந்தையின் பெயர் அல்லது அவர் தம்மைத் தம் தாயின் பெயரைக் குறிப்பிட்டு மகனாக வழக்கமாக விவரித்துரைக்கப்படுமிடத்து, அப்போது அவருடைய தாயின் பெயர் என்றும் பொருள்படும்;

(2) "புத்தகம்" என்பது, புத்தகம் ஒன்றின் ஒரு பகுதியை, மற்றும் புத்தகம் ஒன்றை அல்லது ஒரு புத்தகத்தின் பகுதி ஒன்றை உருவாக்கும் நோக்குடன் ஒன்றாக இணைக்கப்பட்ட எண்ணிக்கை எவற்றிலுமுள்ள ஏடுகளையும் உள்ளடக்கும்;

(3) "மாவட்டம்" மற்றும் "உள்-மாவட்டம்" என்பது, முறையே, இந்தச் சட்டத்தின்படி உருவாக்கப்பட்ட மாவட்டம் மற்றும் உள்-மாவட்டம் என்று பொருள்படும்;

(4) "மாவட்ட நீதிமன்றம்" என்பது, வழக்கமான முதலேற்பு உரிமையியல் அதிகாரவரம்பைக் கொண்ட உயர் நீதிமன்றத்தை உள்ளடக்கும்;

(5) "மேற்குறிப்பு" மற்றும் "மேற்குறிப்பெழுதப்பட்ட" என்பது, இந்தச் சட்டத்தின்படி பதிவு செய்வதற்காகக் கொடுக்கப்பட்ட ஆவணம் எதற்குமான இணைப்புத் தாள் ஒன்றினை அல்லது மேற்புறத் தாளின்மீது பதிவுசெய்யும் அலுவலர் ஒருவரால் எழுதப்பட்ட பதிவுக்குறிப்பு ஒன்றினை உள்ளடக்கும் மற்றும் அந்தப் பதிவுக்குறிப்பிற்கும் பொருந்தும்;

(6) "நிலையியல் சொத்து" என்பது, நிலம், கட்டடங்கள், மரபுவழிப் படித்தொகைகள், பாதைகளுக்கான உரிமைகள், ஒளி, தோணித் துறைகள், மீன் பிடிப் பண்ணைகள் அல்லது நிலத்திலிருந்து எழும் பிற நலன் எதற்குமான உரிமைகள் மற்றும் தரையுடன் சேர்ந்துள்ள அல்லது தரையுடன் சேர்ந்துள்ள எதனுடனும் நிலையாகப் பிணைக்கப்பட்டுள்ள பொருள்களை உள்ளடக்கும்; ஆனால், வெட்டப்படாது நிற்கும் மரத்தையோ, வளரும் பயிரையோ புல்லையோ உள்ளடக்காது;

(6 ஆ) "இந்தியா" என்பது, ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக, இந்திய ஆட்சிநிலவரை என்று பொருள்படும்;

(7) "குத்தகை" என்பது, எதிர்படி கூலியத் ஒன்றை பயிரிடுவதற்கான அல்லது குடியிருப்பதற்கான ஏற்புறுதி ஆவணம் ஒன்றை மற்றும் குத்தகைக்கான உடன்பாடு ஒன்றை உள்ளடக்கும்;

(8) "உரிமைவயதடையாதவர்" என்பது, எந்த இனமுறைச் சட்டத்திற்கு ஒருவர் உட்பட்டிருக்கிறாரோ அந்தச் சட்டத்தின்படி உரிமைவயதினை அடையாதவர் என்று பொருள்படும்;

(9) "அசைவியல் சொத்து" என்பது, வெட்டப்படாது நிற்கும் மரம், வளரும் பயிர் மற்றும் புல், மரங்களிலிருக்கும் பழம், மரங்களிலிருக்கும் சாறு மற்றும் நிலையியல் சொத்து நீங்கலாக, விவரிக்கப்படுகிற பிற ஒவ்வொருவகைச் சொத்து ஆகியவற்றை உள்ளடக்கும்;

(10) "சார்பாற்றுநர்" என்பது, உரிமைவயதடையாத ஒருவரின் காப்பாளர் மற்றும் பித்தர் அல்லது முழுமூடன் ஒருவருக்கான குழு அல்லது பிற சட்ட முறைக் காப்பாட்சியரை உள்ளடக்கும்.

## பகுதி II

## பதிவுத் துறையின் அலுவலகப் பணியமைப்பு

பதிவுத் துறைத் தலைவர்.

3. (1) மாநில அரசாங்கம், அந்த அரசாங்கத்திற்கு உட்பட்டிருக்கிற ஆட்சிநிலவரைகளுக்கென பதிவுத் துறைத் தலைவராக அலுவலர் ஒருவரை அமர்த்துதல் வேண்டும்:

வரம்புரையாக: மாநில அரசாங்கம் அத்தகைய அமர்த்தம் செய்வதற்குப் பதிலாகப் பதிவுத் துறைத் தலைவருக்கு இதன் பின்னர் அளிக்கப்பட்ட மற்றும் சுமத்தப்பட்ட அதிகாரங்கள் மற்றும் கடமைகள் அனைத்தும் அல்லது அவற்றுள் எவையும், மாநில அரசாங்கம் இதற்கென அமர்த்துகிற அத்தகைய அலுவலரால் அல்லது அலுவலர்களால் அத்தகைய வட்டாரஎல்லைகளுக்குள் செலுத்தப்பட மற்றும் நிறைவேற்றப்பட வேண்டும் என்று பணிக்கலாம்.

(2) பதிவுத் துறைத் தலைவர் எவரும், ஒரே நேரத்தில் அரசாங்கத்தின்கீழ் பிற பதவி எதனையும் வகிக்கலாம்.

4. [சிந்து (மாநிலக்) கிளையின் பதிவுத் துறைத் தலைவர்] (இந்திய அரசாங்க இந்தியச் சட்டங்களின் இணக்க) ஆணை, 1937இனால் நீக்கறவு செய்யப்பட்டது.

மாவட்டங்களும் உள்-மாவட்டங்களும்.

5. (1) இந்தச் சட்டத்தின் நோக்கங்களைப் பொறுத்தவரையில், மாநில அரசாங்கம் மாவட்டங்களையும் உள்-மாவட்டங்களையும் உருவாக்குதல் வேண்டும்; மற்றும் அவற்றின் எல்லைகளை வகுத்துரைத்தல் வேண்டும் மற்றும் அத்தகைய மாவட்டங்கள் மற்றும் உள்-மாவட்டங்களின் எல்லைகளை மாற்றியமைக்கலாம்.

(2) இந்தப் பிரிவின்படி உருவாக்கப்பட்ட மாவட்டங்கள் மற்றும் உள்-மாவட்டங்கள் மற்றும் அவற்றுக்கான எல்லைகளையும் சேர்த்து மற்றும் அத்தகைய எல்லைகளின் மாற்றம் ஒவ்வொன்றும், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை செய்யப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய மாற்றம் ஒவ்வொன்றும், அந்த அறிவிக்கை செய்யப்பட்ட தேதிக்குப் பின்னர் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நாளன்று செல்திறம் பெறுதல் வேண்டும்.

பதிவாளர்களும் சார்-பதிவாளர்களும்.

6. மாநில அரசாங்கம், அது பொருத்தமென கருதுபவர்களை அவர்கள் அரசு அலுவலர்களாக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் முறையே மேற்சொன்னவாறு உருவாக்கப்பட்ட பல்வேறு மாவட்டங்களுக்குப் பதிவாளர்களாக, மற்றும் பல்வேறு உள்-மாவட்டங்களுக்குச் சார்-பதிவாளர்களாக அமர்த்தலாம்.

பதிவாளரின மற்றும் சார்-பதிவாளரின் அலுவலகங்கள்.

7.(1) மாநில அரசாங்கம் மாவட்டம் ஒவ்வொன்றிலும், பதிவாளர் அலுவலகம் என்று வழங்கப்படவேண்டிய அலுவலகம் ஒன்றையும், உள்-மாவட்டம் ஒவ்வொன்றிலும் சார்-பதிவாளர் அலுவலகம் அல்லது இணைச் சார்-பதிவாளர்கள் அலுவலகம் என்று வழங்கப்பட வேண்டிய அலுவலகம் ஒன்றை அல்லது அலுவலகங்களை நிறுவுதல் வேண்டும்.

(2) மாநில அரசாங்கம், பதிவாளர் ஒருவரின் அலுவலகம் எதனுடனும் அத்தகைய பதிவாளருக்குக் கீழமைந்துள்ள சார்-பதிவாளர் ஒருவரின் அலுவலகம் எதனையும் ஒருங்கிணைக்கலாம் மற்றும் அவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்டுள்ள அலுவலகத்தின் சார்-பதிவாளர் எவருக்கும், அவருடைய சொந்த அதிகாரங்கள் மற்றும் கடமைகளுடன் சேர்த்து, அவர் எந்தப் பதிவாளருக்குக் கீழமைந்துள்ளாரோ அந்தப் பதிவாளரின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் அனைத்தையும் அல்லது அவற்றில் எவற்றையும் செலுத்துவதற்கும் ஆற்றுவதற்கும் அதிகாரம் அளிக்கலாம்:

வரம்புரையாக: அத்தகைய அதிகாரமளிப்பு எதுவும், இந்தச் சட்டத்தின்படி ஒரு சார்-பதிவாளர் தன்னால் பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒன்றுக்கு எதிரான மேன்முறையீடு ஒன்றை விசாரிப்பதற்கு அவரை இயல்விக்காது.

பதிவு அலுவலகங்களின் ஆய்வாளர்கள்.

8.(1) மாநில அரசாங்கம் பதிவு அலுவலகங்களின் ஆய்வாளர்கள் என்று அழைக்கப் பெறுகிற அலுவலர்களையும் அமர்த்தலாம், மேலும், அத்தகைய அலுவலர்களின் கடமைகளை வகுத்துரைக்கலாம்.

(2) அத்தகைய ஆய்வாளர் ஒவ்வொருவரும், பதிவுத் துறைத் தலைவருக்குக் கீழமைந்தவராவார்.

9. [படைத்துறைப் பாளையங்கள், உள்-மாவட்டங்களாக அல்லது மாவட்டங்களாக விளம்பப்படலாம்] நீக்கறவு செய்தல் மற்றும் திருத்தம் செய்தல்
10/1927 சட்டம், 1927 இன் பிரிவு 3 மற்றும் இணைப்புப்பட்டியல் II இன் வாயிலாக நீக்கறவு செய்யப்பட்டது.

பதிவாளர் வாராதிருத்தல் அல்லது அவரது பதவி காலியாக இருத்தல்.

10. (1) மாகாணத் தலைநகர் உட்பட, ஒரு மாவட்டத்தின் பதிவாளர் அல்லாத பிற பதிவாளர் எவரும், தமது கடமையின் பொருட்டாக அன்றி, பிறவாறு எதன் பொருட்டும் வாராதிருக்கும்போது அல்லது அவரது பதவி தற்காலிகமாகக் காலியாக இருக்கும்போது பதிவுத் துறைத் தலைவர் இதற்கென அமர்த்தும் ஆள் எவரும் அல்லது அத்தகைய அமர்த்தம் செய்யப்படாதபோது, எந்த மாவட்ட நீதிமன்ற நீதிபதியின் வட்டாரஅதிகாரவரம்பிற்குள் பதிவாளரின் அலுவலகம் அமைந்துள்ளதோ அந்த நீதிமன்ற நீதிபதி, அவ்வாறு பதிவாளர் வாராதிருக்கும் போது அல்லது மாநில அரசாங்கம் அந்தக் காலியிடத்தை நிரப்பும் வரையில் பதிவாளராக இருப்பார்.

(2) மாகாணத் தலைநகர் உட்பட, ஒரு மாவட்டத்தின் பதிவாளர் கடமையின் பொருட்டாக அன்றி, பிறவாறு எதன் பொருட்டும் வாராதிருக்கும்போது, அல்லது அவரது பதவி தற்காலிகமாகக் காலியாக இருக்கும்போது, பதிவுத் துறைத் தலைவர் இதற்கென அமர்த்துகிறவர் எவரும், அவ்வாறு பதிவாளர் வாராதிருக்கையில் அல்லது மாநில அரசாங்கம் அந்தக் காலியிடத்தை நிரப்பும் வரையில் பதிவாளராக இருப்பார்.

பதிவாளர் தமது மாவட்டத்தில் பணிபுரிகையில் வாராதிருத்தல்.

11. பதிவாளர் எவரும், பணிபுரிகையில், அவரது மாவட்டத்தில் இருந்து அவரது அலுவலகத்திற்கு வாராதிருக்கும்போது, அவர் தம்முடைய மாவட்டத்திலுள்ள சார்-பதிவாளர் அல்லது பிற ஆள் எவரையும், பிரிவு 68 மற்றும் பிரிவு 72 இல் குறிப்பிடப்பட்டவை நீங்கலாகப், பதிவாளருடைய பிற கடமைகள் அனைத்தையும் அவர் அவ்வாறு வாராதிருக்கும்போது, புரிவதற்காக அமர்த்தலாம்.

சார்-பதிவாளர் வாராதிருத்தல் அல்லது அவரது பதவி காலியாக இருத்தல்.

12. சார்பதிவாளர் எவரும் வாராதிருக்கும் போது அல்லது அவரது பதவி தற்காலிகமாக காலியாக இருக்கும்போது, அந்த மாவட்ட பதிவாளர் இதற்கென அமர்த்தும் ஆள் எவரும், அவ்வாறு சார்-பதிவாளர் வாராதிருக்கையில் அல்லது காலி இடம் நிரப்பப்படும் வரையில் சார்-பதிவாளராக இருப்பார்.

பிரிவு 10, 11 மற்றும் 12இன் கீழான பதவி அமர்த்தங்கள் பற்றி மாநில அரசாங்கத்திற்கு அறிக்கை.

13. (1) பிரிவு 10, பிரிவு 11 அல்லது பிரிவு 12இன் கீழ் செய்யப்பட்ட அமர்த்தங்கள் அனைத்தும், பதிவுத் துறை தலைவரால் மாநில அரசாங்கத்திற்கு அறிக்கை செய்யப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய அறிக்கையானது மாநில அரசாங்கம் பணிக்கின்றவாறு தனியுறுவாகவோ அல்லது பொதுவாகவோ இருத்தல் வேண்டும்.

பதிவு செய்யும் அலுவலர்களின் பணியாளர் தொகுதி.

14. (1) [விட்டுவிடப்பட்டது.]

(2) மாநில அரசாங்கம் இந்தச் சட்டத்தின்படியான பல்வேறு அலுவலகங்களுக்கான உரிய பணியாளர் தொகுதிகளை அனுமதிக்கலாம்.

பதிவு செய்யும் அலுவலர்களின் இலச்சினை.

15. பல்வேறு பதிவாளர்கள் மற்றும் சார் பதிவாளர்கள், ஆங்கிலத்தில், மற்றும் மாநில அரசாங்கம் பணிக்கிறவாறு பிற மொழியில் பின்வருமாறு பொறிக்கப்பட்டிருக்கிற இலச்சினை ஒன்றை பயன்படுத்த வேண்டும்;—

"............பதிவாளரின் (அல்லது, சார்-பதிவாளரின்) இலச்சினை".

பதிவுப் புத்தகங்கள் மற்றும் தீப்பற்றா பெட்டிகள்.

16. (1) மாநில அரசாங்கம், பதிவுசெய்யும் அலுவலர் ஒவ்வொருவரின் அலுவலகத்திற்கும், இந்தச் சட்டத்தின் நோக்கங்களைப் பொறுத்தவரையில் தேவைப்படும் புத்தகங்களை வழங்கும்.

(2) அவ்வாறு வழங்கப்பட்ட புத்தகங்கள், மாநில அரசாங்கத்தின் ஒப்பளிப்புடன், பதிவுத் துறைத் தலைவரால் அவ்வப்போது வகுத்துரைக்கப்பட்ட படிவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்; மற்றும் அத்தகைய புத்தகங்களின் பக்கங்கள் அச்சினால் தொடர் எண் இடப்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் ஒவ்வொரு புத்தகத்திலும் பக்கங்களின் எண்ணிக்கை, புத்தகங்கள் வழங்கப்பட்ட அலுவலரால் முகப்புப் பக்கத்தில் உறுதிச்சான்று அளிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) மாநில அரசாங்கம், ஒவ்வொரு பதிவாளர் அலுவலகத்திற்கும் தீப்பற்றாத பெட்டி ஒன்றை வழங்குதல் வேண்டும், மற்றும் மாவட்டம் ஒவ்வொன்றிலும் அத்தகைய மாவட்டத்தின் ஆவணங்களைப் பதிவு செய்தலுடன் தொடர்புடைய பதிவணங்களை பாதுகாப்பதற்காகத் தக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.

## பகுதி III

## பதிவு செய்யப்படத்தக்க ஆவணங்கள்

கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டிய ஆவணங்கள்.

17. (1) பின்வரும் ஆவணங்கள் தொடர்பான சொத்தானது, சட்ட எண் XVI/ 1864 அல்லது இந்தியப் பதிவுச் சட்டம், 1866 அல்லது இந்தியப் பதிவுச் சட்டம் 1871 அல்லது இந்தியப் பதிவுச் சட்டம், 1877 அல்லது இந்தச் சட்டம் செல்லாற்றல் பெற்றுள்ள அல்லது பெற்றுவருகிற தேதியன்று அல்லது அந்தத் தேதிக்குப் பின்பு எழுதிக்கொடுக்கப்பட்டிருப்பின், அவை பதிவு செய்யப்படுதல் வேண்டும்; அதாவது;— 20/1866, 8/1871 3/1877

(அ) நிலையியல் சொத்தின் கொடைக்கான முறையாவணங்கள்;

(ஆ) நிலையியல் சொத்துக்கு அல்லது நிலையியல் சொத்தில் நூறு ரூபாய் மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்புடைய உரிமை, உரிமைமூலம் அல்லது உரித்தம் எதுவும், அது உற்றமைந்தாலும் அல்லது நேரக் கூடியதாக இருந்தாலும் அல்லது அது நிகழ்காலத்தில் அல்லது அது வருங்காலத்தில் ஏற்படுவதாக, விளம்புவதாக, குறித்தளிப்பதாக, வரம்பிடுவதாக அல்லது அழித்துவிடுவதாக புலப்படுகிற அல்லது செயற்படுகிற விருப்புறுதி ஆவணம் அல்லாத பிற முறையாவணங்கள்;

(இ) அத்தகைய உரிமை, உரிமைமூலம் அல்லது உரித்தம் எதனையும் ஏற்படுத்துதல், விளம்புதல், குறித்தளித்தல், வரம்பிடுதல் அல்லது அழித்துவிடுதல் காரணமாக மறுபயன் எதுவும் பெறப்பட்டது அல்லது செலுத்தப்பட்டது என்பதை ஒப்புகை செய்கிற விருப்புறுதி ஆவணமல்லாத முறையாவணங்கள்; மற்றும்

(ஈ) ஆண்டுக்கு ஆண்டு அல்லது ஓர் ஆண்டிற்கு மேற்பட்ட காலஅளவு எதற்கும் அல்லது ஆண்டு வாடகைக்கு வகைசெய்கிற நிலையியல் சொத்தின் குத்தகைகள்;

(உ) ஒரு நீதிமன்றத்தின் தீர்ப்பாணை அல்லது ஆணை எதுவும் அல்லது தீர்வம் எதுவும், நிலையியல் சொத்திற்கு அல்லது நிலையியல் சொத்தில் நூறு ரூபாய் மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்புடைய உரிமையை, உரிமை மூலத்தை அல்லது உரித்தத்தை அது உற்றமைந்திருந்தாலும் அல்லது நேரக்கூடியதாக இருந்தாலும், நிகழ் காலத்தில் அல்லது வருங்காலத்தில் ஏற்படுவதாக, விளம்புவதாக, குறித்தளிப்பதாக, வரம்பிடுவதாக அல்லது அழித்து விடுவதாகப் புலப்படுகிற அல்லது செயல்படுகிறபோது, அந்தத் தீர்ப்பாணை அல்லது ஆணை அல்லது தீர்வத்தை மாற்றல் செய்கிற அல்லது குறித்தளிக்கிற விருப்புறுதி ஆவணம் அல்லாத முறையாவணங்கள்:

வரம்புரையாக: மாநில அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படும் ஆணை வாயிலாக, மாவட்டம் அல்லது மாவட்டம் ஒன்றின் பகுதி எதிலும் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ள எந்தக் குத்தகைகள் மூலம் வழங்கப்பட்ட காலஅளவுகள் ஐந்தாண்டுகளுக்கு மேற்படாமலும் வகைசெய்யப்பட்ட ஆண்டு வாடகை ஐம்பது ரூபாய்க்கு மேற்படாமலும் இருக்கின்றனவோ அந்தக் குத்தகைகள் எவற்றிற்கும் இந்த உட்பிரிவின் செயற்பாட்டிலிருந்து விலக்களிக்கலாம்.

(2) உட்பிரிவு (1) இன் கூறு (ஆ) மற்றும் (இ) எதுவும்—

(i) இணைக்க ஒப்பாவணம் எதற்கும், அல்லது

(ii) ஒரு கூட்டுப்பங்கு நிறுமத்தின் சொத்திருப்புகள் முழுவதும் அல்லது அதன்பகுதி நிலையியல் சொத்தாக இருந்தபோதிலும் அத்தகைய நிறுமத்தின் பங்குகள் தொடர்பான முறையாவணங்கள் எதற்கும், அல்லது.

(iii) அத்தகைய நிறுமம் எதனாலும் வழங்கப்பட்டுள்ள மற்றும் அந்த நிறுமத்தின் பதிவு செய்யப்பட்ட முறையாவணம் ஒன்றின் வாயிலாக அதன் நிலையியல் சொத்து முழுவதையும் அல்லது அதன் பகுதியை அல்லது அதிலுள்ள உரித்தம் எதையும் அத்தகைய கடனீட்டு ஆவணங்களை வைத்திருப்பவரின் நலனுக்காகப் பொறுப்புரிமையர்களுக்கு பொறுப்புரிமையின்மீது அடைமானம் வைத்திருக்கிற அல்லது சொத்து மாற்றம் செய்திருக்கிற அல்லது பிறவாறாக மாற்றியிருக்கிற போது, அந்த முறையாவணம், கடனீட்டு ஆவணங்களை வைத்திருப்பவர்களுக்கு அளிக்கிற பிணையத்தின் அளவுக்குத் தவிர, நிலையியல் சொத்தில் உரிமை, உரிமை மூலம் அல்லது உரித்தம் எதனையும் ஏற்படுத்தாத, விளம்பாத, குறித்தளிக்காத, வரம்பிடாத அல்லது அழிக்காததுமான கடனீட்டு ஆவணம் எதற்கும், அல்லது

(iv) அத்தகைய நிறுமம் எதனாலும் வழங்கப்பட்டுள்ள கடனீட்டு ஆவணம் எதன்மீதும் எழுதப்பட்ட மேற்குறிப்பு அல்லது அதன் உரிமை மாற்றம் எதற்கும், அல்லது

(v) நிலையியல் சொத்திற்கு அல்லது நிலையியல் சொத்தில் நூறு ரூபாய்க்கு மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்புடைய உரிமை, உரிமை மூலம், அல்லது உரித்தம் எதனையும் அது தானாகவே ஏற்படுத்தாமல், விளம்பப்படாமல், குறித்தளிக்காமல், வரம்பிடாமல் அல்லது அழிந்துவிடாத ஆனால் பிற ஆவணம் எதுவும், அது எழுதிக் கொடுக்கப்படுகிறபோது அத்தகைய உரிமையை, உரிமை மூலத்தை அல்லது உரித்தத்தை ஏற்படுத்துமோ, விளம்புமோ, குறித்தளிக்குமோ, வரம்பிடுமோ அல்லது அழித்து விடுமோ அத்தகைய பிற ஆவணத்தையும் பெறுவதற்கான ஓர் உரிமையை மட்டுமே உண்டாக்கும் ஆவணம் எதற்கும், அல்லது

(vi) இணக்க உடன்பாடு ஒன்றின்மீது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டதும் மற்றும் உரிமைவழக்கு அல்லது நடவடிக்கைக்கு உரிய நுதல்பொருள் அல்லாத நிலையியல் சொத்தை உள்ளடக்கியதுமான தீர்ப்பாணை அல்லது ஆணை அல்லாத, நீதிமன்றம் ஒன்றின் தீர்ப்பாணை அல்லது ஆணை எதற்கும், அல்லது

(vii) அரசாங்கத்தினால் மானியமாக அளிக்கப்பட்ட நிலையியல் சொத்து எதற்கும், அல்லது

(viii) வருவாய்த் துறை அலுவலர் ஒருவரால் செய்யப்பட்ட பாகப்பிரிவினைக்கான முறையாவணம் எதற்கும், அல்லது

26/1871 19/1883 (ix) நில மேம்பாட்டுச் சட்டம், 1871 அல்லது நில மேம்பாட்டுக் கடன்கள் சட்டம், 1883 இன்படி கடன் வழங்கும் ஆணை அல்லது கடனைச் செலுத்துவதற்காகக் கொடுக்கப்பட்ட சார்பிணையத்திற்கான முறையாவணம் எதற்கும், அல்லது

12/1884 (x) வேளாண் கடன்கள் சட்டம், 1884 இன்படிகடன் வழங்கும் ஆணை அல்லது இதே சட்டத்தின்படி கொடுக்கப்பட்ட கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கும் பிணையளிப்பதற்கான முறையாவணம் எதற்கும், அல்லது

(xஅ) அறக்கட்டளைகள் சட்டம், 1890இன்படி அறக்கட்டளைகளின் பொருளாளர் ஒருவரிடம் சொத்து எதனையும் உற்றமைந்திருக்கும்படி, சொத்து அல்லது அத்தகைய பொருளாளர் எவரிடமிருந்தும் சொத்து எதனையும் நீக்கிவிடும்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை எதற்கும், அல்லது 6/1890

(xi) அடைமானப் பணம் முழுவதும் அல்லது அதன் பகுதி எதுவும் செலுத்தப்பட்டதை ஒப்புகை செய்கிற அடைமான ஒப்பாவணத்தின்மீது மேற்குறிப்பு எதற்கும், மற்றும் அது அடைமானத்தைத் தீர்த்துவிடுவதற்குப் புலப்படாத வரைவுச்சீட்டாக இருக்கும்போது, அடைமானம் ஒன்றின்படி கொடுபட வேண்டிய பணம் செலுத்தப்பட்டதற்கான பிற வரவுச்சீட்டு எதற்கும், அல்லது

(xii) குடியியல் அல்லது வருவாய்த்துறை அலுவலர் ஒருவரால் பொது ஏலத்தின் வாயிலாக விற்கப்பட்ட சொத்து எதனையும் விலைக்குவாங்குவதற்கு வழங்கப்பட்ட விற்பனை உறுதிச்சான்று எதற்கும்,

பொருந்தாது.

**விளக்கம்.**—நிலையியல் சொத்தின் விற்பனைக்கான ஒப்பந்தம் ஒன்றைச் செல்திறப்படுத்துவதைப் புலப்படுத்தும் அல்லது செயற்படுத்தும் ஆவணம் ஒன்றை, அத்தகைய ஆவணமானது, ஒப்பந்த உறுதிப்பணம் எதனையும் அல்லது கொள்வினைத்தொகை முழுவதையும் அல்லது அதன் பகுதி எதனையும் செலுத்துவதற்கான சொற்றொடரைக் கொண்டிருக்கிறது என்ற பொருண்மையின் காரணத்தினால் மட்டுமே பதிவுசெய்யுமாறு வேண்டுறுத்தப்படுவது அல்லது எப்போதேனும் வேண்டுறுத்தப்படுவதாக இருந்தது என்று கொள்ளப்படுதல் ஆகாது.

*(3)* மகன் ஒருவனை மகவேற்பு செய்வதற்காக 1872 ஜனவரி முதல் நாளுக்குப் பின்னர் எழுதிக் கொடுக்கப்பட்ட ஆனால் விருப்புறுதி ஆவணம் ஒன்றால் அளிக்கப்படாத அதிகார ஆவணங்களும் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

விருப்பத் தேர்வின்படி பதிவு செய்யப் படலாகும் ஆவணங்கள்.

18. இந்தச் சட்டத்தின் பின்வரும் ஆவணங்களில் எவையும் பதிவு செய்யப்படலாம், அவையாவன:—

*(அ)* நிலையியல் சொத்துக்கு அல்லது நிலையியல் சொத்தில் நூறு ரூபாய்க்குக் குறைந்த மதிப்பினை உடைய உரிமை, உரிமைமூலம் அல்லது உரித்தம் எதனையும், அது உற்றமைந்திருந்தாலும் நேரக்கூடியதாக இருந்தாலும், நிகழ்காலத்தில் அல்லது வருங்காலத்தில் ஏற்படுவதாக, விளம்புவதாக, குறித்தளிப்பதாக, வரம்பிடுவதாக அல்லது அழித்துவிடுவதாக புலப்படுகிற அல்லது செயற்படுவதாக அல்லது அழித்துவிடுவதாக புலப்படுகிற அல்லது செயற்படுகிற (கொடை மற்றும் விருப்புறுதி ஆவணம் அல்லாத) முறையாவணங்கள்;

*(ஆ)* அத்தகைய உரிமை, உரிமைமூலம் அல்லது உரித்தம் எதனையும் ஏற்படுத்துதல், விளம்புதல், குறித்தளித்தல், வரம்பிடுதல் அல்லது அழித்துவிடுதல் காரணமாக மறுபயன் எதுவும் பெறப்பட்டது அல்லது செலுத்தப்பட்டது என்று ஒப்புகைசெய்கிற முறையாவணங்கள்;

*(இ)* ஓராண்டுக்கு மேற்படாத காலஅளவு எதற்குமான நிலையியல் சொத்தின் குத்தகைகள் மற்றும் பிரிவு 17இன்படி விலக்களிக்கப்பட்ட குத்தகைகள்;

*(இஇ)* நீதிமன்றம் ஒன்றின் தீர்ப்பாணை அல்லது ஆணை எதுவும் அல்லது தீர்வம் எதுவும் நிலையியல் சொத்திற்கு அல்லது நிலையியல் சொத்தில் நூறு ரூபாய்க்குக் குறைந்த மதிப்புடைய உரிமை, உரிமை மூலம் அல்லது உரித்தம் எதனையும் அது உற்றமைந்திருந்தாலும் அல்லது நேரக்கூடியதாக இருந்தாலும், நிகழ்காலத்திலோ அல்லது வருங்காலத்திலோ ஏற்படுவதாகப் புலப்படும்போது அல்லது செயற்படும்போது அத்தகைய தீர்ப்பாணையை அல்லது ஆணையை அல்லது தீர்வத்தை மாற்றல் செய்கிற அல்லது குறித்தளிக்கிற முறையாவணங்கள்;

(ஈ) அசைவியல் சொத்திற்கு அல்லது அசைவியல் சொத்தில் உரிமை, உரிமைமூலம் அல்லது உரித்தம் எதனையும் ஏற்படுத்துவதாக, விளம்புவதாக, குறித்தளிப்பதாக, வரம்பிடுவதாக அல்லது அழித்து விடுவதாகப் புலப்படுகிற அல்லது செயற்படுகிற (விருப்புறுதி ஆவணங்கள் அல்லாத பிற) முறையாவணங்கள்;

(உ) விருப்புறுதி ஆவணங்கள்; மற்றும்

(ஊ) பிரிவு 17 இன்படி பதிவுசெய்யப்படுவதற்கு வேண்டுறுத்தப்படாத பிற ஆவணங்கள் அனைத்தும்.

பதிவு செய்யும் அலுவலரால் புரிந்துகொள்ள முடியாத மொழியிலிருக்கிற ஆவணங்கள்.

19. பதிவு செய்வதற்காக உரியவாறு முன்னிடப்படும் ஆவணம் எதுவும், பதிவு செய்யும் அலுவலருக்குப் புரியாத மொழியில் மற்றும் அந்த மாவட்டத்தில் பொதுவாகப் பயன்படுத்தப்படாத மொழியில் இருக்குமாயின், அதனுடன் அந்த மாவட்டத்தில் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிற மொழியில் அதன் உண்மையான மொழிபெயர்ப்பு ஒன்றும் மற்றும் உண்மையான படி ஒன்றும் சேர்க்கப்பட்டிருந்தாலன்றி, அதனை அவர் பதிவுசெய்வதற்கு மறுத்து விடுதல் வேண்டும்.

வரியிடைச் சொற்கள் வெற்றிடங்கள், அழித்தல்கள் அல்லது மாறுதல்களைக் கொண்டிருக்கும் ஆவணங்கள்.

20. (1) வரியிடைச்சொல், வெற்றிடம், அழித்தல் அல்லது மாறுதல் எதுவும் காணப்படுகிற ஆவணம் எதனையும் அந்த ஆவணத்தை எழுதிக்கொடுக்கிறவர்கள் அத்தகைய வரியிடைச்சொல், வெற்றிடம், அழித்தல் அல்லது மாறுதலைத் தமது கையொப்பங்கள் அல்லது சுருக்கொப்பங்களுடன் சான்றளித்தாலன்றி, பதிவுசெய்யும் அலுவலர் தம் உளத்தேர்வின்படி அதனைப் பதிவுசெய்ய ஏற்றுக்கொள்வதற்கு மறுத்துவிடலாம்.

(2) பதிவுசெய்யும் அலுவலர் அத்தகைய ஆவணம் எதனையும் பதிவு செய்வாராயின், அவர், அதனைப் பதிவுசெய்யும் நேரத்தில், அத்தகைய வரியிடைச்சொல், வெற்றிடம், அழித்தல் அல்லது மாறுதலைப் பற்றிப் பதிவேட்டில் குறிப்பொன்றைச் செய்தல் வேண்டும்.

சொத்தின் விவரிப்பு மற்றும் புவிப்படங்கள் அல்லது அமைப்புப் படங்கள்.

21. (1) நிலையியல் சொத்து தொடர்பான விருப்புறுதி ஆவணம் அல்லாத ஆவணம் எதுவும், அது அத்தகைய சொத்தினை அடையாளங்காட்டப் போதுமான விவரிப்பு ஒன்றைக் கொண்டிருந்தாலன்றி, பதிவு செய்வதற்காக ஏற்றுக்கொள்ளப்படுதல் ஆகாது.

(2) நகரங்களிலுள்ள வீடுகள், அவற்றிற்கு எதிரேயுள்ள (குறித்துரைக்கப்படவேண்டியதாக இருக்கிற) தெரு அல்லது சாலைக்கு வடக்கில் அல்லது பிற திசையில் அமைந்துள்ள, மற்றும் அவற்றில் தற்போதுள்ள, மற்றும் முன்பிருந்த, கையுடைமையாளர்களைக் குறிப்பிட்டும் அத்தகைய தெரு அல்லது சாலையிலுள்ள வீடுகள் எண் இடப்பட்டிருக்குமாயின், அவற்றின் எண்களைக் குறிப்பிட்டு விவரிக்கப்படுதல் வேண்டும்.

(3) பிற வீடுகளும் நிலங்களும் அவற்றிற்கான பெயர் எவையும் இருப்பின், அவற்றினாலும், அவை எந்த ஆட்சிநிலவரைப் பிரிவில் அமைந்துள்ளனவோ அந்த ஆட்சிநிலவரைப் பிரிவில் இருப்பனவாகவும் மற்றும் அவற்றின்மேல் அமைக்கப்பட்டிருப்பவையினாலும் அவை எந்தச் சாலைகள் மற்றும் பிற சொத்துக்களை ஒட்டியமைந்துள்ளனவோ அவற்றினாலும், அவற்றில் தற்போதுள்ள கையுடைமையாளர்களினாலும் மற்றும் அத்துடன் நடைமுறைக்கு ஏற்ற போதெல்லாம் ஓர் அரசாங்கப் புவிப்படம் பற்றிய அல்லது நில அளவை பற்றிய குறிப்பினாலும் விவரிக்கப்படுதல் வேண்டும்.

(4) அதனுள் உள்ளடங்கிய சொத்து எதற்குமான புவிப்படம் ஒன்றை அல்லது அமைப்புப்படம் ஒன்றைக் கொண்டிருக்கிற விருப்புறுதி ஆவணம் அல்லாத ஆவணம் எதுவும், அந்தப் புவிப்படம் அல்லது அமைப்புப்படம் ஒன்றின் உண்மைப்படியுடன் சேர்த்து அல்லது அத்தகைய சொத்தானது பல்வேறு மாவட்டங்களில் அமைந்திருக்கும் நேர்வில், அவ்வாறு அமைந்துள்ள மாவட்டங்களின் எண்ணிக்கைக்குச் சமன்மையான எண்ணிக்கையில் புவிப்படம் அல்லது அமைப்புப் படத்தின் உண்மைப்படிகளுடன் சேர்த்துக் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, பதிவு செய்வதற்கு ஏற்றுக்கொள்ளப்படுதல் ஆகாது.

அரசாங்கப் புவிப்படங்கள் அல்லது நில அளவைகள் பற்றிய குறிப்புகளின் வாயிலாக வீடுகள் மற்றும் நிலத்தை விவரித்தல்.

22. (1) வீடுகள், அதாவது நகரங்களில் அமைந்திராத வீடுகளை மற்றும் நிலங்களை அரசாங்கப் புவிப்படம் அல்லது நில அளவையைக் குறிப்பதன் வாயிலாக விவரிப்பது நடைமுறைக்கு ஏற்றதென மாநில அரசாங்கம் கருதுமிடத்து, மேற்சொல்லப்பட்டவாறான அத்தகைய வீடுகளும் நிலங்களும், பிரிவு 21 இன் நோக்கங்களைப் பொறுத்தவரை, அவ்வாறு விவரிக்கப்படுதல் வேண்டுமென மாநில அரசாங்கம் இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளின் வாயிலாக வேண்டுறுத்தலாம்.

(2) உட்பிரிவு (1) இன்படி வகுக்கப்பட்ட விதியில் பிறவாறாக வகை செய்யப்பட்டது நீங்கலாக, பிரிவு 21 இன் உட்பிரிவு (2) இன் அல்லது உட்பிரிவு (3) இன் வகையங்களுக்கு இணங்கத் தவறுவதானது, ஆவணம் தொடர்பான சொத்தின் விவரிப்பு அந்தச் சொத்தை அடையாளம் காட்டுவதற்குப்போதுமானதாக இருப்பின், அந்த ஆவணம் பதிவு செய்யப்படுவதற்கு உரிமை கொண்டிராததாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

## பகுதி IV

## முன்னிடுவதற்கான காலம்

ஆவணங்களை முன்னிடுவதற்கான காலம்.

23. பிரிவுகள் 24, 25 மற்றும் 26 இல் அடங்கியுள்ள வகையங்களுக்கு உட்பட்டு, விருப்புறுதி ஆவணம் அல்லாத பிற ஆவணம் எதுவும், அது எழுதிக் கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து நான்கு மாதங்களுக்குள் உரிய அலுவலருக்குப் பதிவுசெய்யும் பொருட்டு முன்னிடப்பட்டாலன்றி, பதிவு செய்வதற்கு ஏற்றுக்கொள்ளப்படுதல் ஆகாது:

வரம்புரையாக: தீர்ப்பாணை அல்லது ஆணையின் ஒரு படியானது, அந்தத் தீர்ப்பாணை அல்லது ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளில் இருந்து நான்கு மாதங்களுக்குள், அல்லது மேல்முறையீடு செய்யப்படத்தக்கதாயிருப்பின், அது அறுதியாகி விடுகிற நாளில் இருந்து நான்கு மாதங்களுக்குள், முன்னிடப்படலாம்.

குறித்த சில ஆவணங்களை மறுபதிவுசெய்தல்

23 (அ). இந்தச் சட்டத்தில் இதற்கு மாறாக அடங்கியுள்ள எது எவ்வாறு இருப்பினும், நேர்வு எதிலும் பதிவு செய்வதற்கு வேண்டுறுத்தப்படும் ஆவணம் ஒன்று, அதனை முன்னிடுவதற்கு உரியவாறு அதிகாரமளிக்கப்படாத ஒருவரிடமிருந்து பதிவாளர் அல்லது சார்-பதிவாளர் ஒருவரால் பதிவுசெய்வதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டு, பதிவுசெய்யப்பட்டிருப்பின், அத்தகைய ஆவணத்தின் வாயிலாக உரிமைகோருகிறவர் எவரும், அத்தகைய ஆவணத்திற்கான பதிவானது செல்லாநிலையது என்று அவர் முதன்முதலாக அறியவந்ததில் இருந்து நான்கு மாதங்களுக்குள், எந்த மாவட்டத்தில் அந்த ஆவணம் முதன் முதலில் பதிவு செய்யப்பட்டதோ அந்த மாவட்டத்தின் பதிவாளர் அலுவலகத்தில் மறுபதிவிற்காக, பகுதி VI இன் வகையங்களுக்கு இணங்க அந்த ஆவணத்தை முன்னிடலாம் அல்லது முன்னிடச் செய்யலாம்; மற்றும் அந்த ஆவணமானது, அதனை முன்னிடுவதற்கு உரியவாறு அதிகாரமளிக்கப்படாத ஆள் ஒருவரிடமிருந்து பதிவுசெய்வதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது என்று பதிவாளர் தெளிவுறக் காண்பதன் பேரில், அது முன்னதாகவே பதிவுசெய்யப்பட்டிராதது போன்றும், மறு பதிவிற்கான அத்தகைய முன்னீடானது, பகுதி IV இன்படி பதிவு செய்வதற்காக அதற்கென அனுமதிக்கப்பட்ட காலத்திற்குள் முன்னிடப்பட்டது போன்றும் அவர் அந்த ஆவணத்தை மறுபதிவு செய்வதற்கு முற்படுதல் வேண்டும்; மற்றும் ஆவணங்களில் பதிவுபற்றிய இந்தச் சட்டத்தின் வகையங்கள் அனைத்தும் அத்தகைய மறுபதிவிற்குப் பொருந்துதல் வேண்டும்; மற்றும் அத்தகைய ஆவணம் இந்தப் பிரிவின் வகையங்களுக்கு இணங்க உரியவாறு மறுபதிவு செய்யப்படுமாயின், நோக்கங்கள் அனைத்திற்காகவும், அது முதலில் பதிவு செய்யப்பட்ட தேதியில் இருந்தே உரியவாறு பதிவுசெய்யப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக: இந்தப் பிரிவு எந்த ஆவணத்திற்குப் பொருந்துகிறதோ அதே ஆவணத்தின்படி உரிமைகோருகிற எவரும், 1917, செப்டம்பர் பன்னிரெண்டாம் நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அந்த ஆவணத்தின் பதிவு செல்லாநிலையது என்று முதலில் அறியவந்த காலம் எதுவாக இருந்தபோதிலும், இந்தப் பிரிவிற்கு இணங்க அதனை மறு பதிவிற்காக முன்னிடலாம் அல்லது முன்னிடச் செய்யலாம்.

வெவ்வேறு காலங்களில் பல்வேறு ஆட்களால் எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணங்கள்.

24. பல்வேறு ஆட்கள் ஆவணம் ஒன்றை வெவ்வேறு காலங்களில் எழுதிக் கொடுக்குமிடத்து, அத்தகைய ஆவணத்தின் பதிவிற்காக மற்றும் மறுபதிவிற்காக, எழுதிக் கொடுக்கப்பட்ட தேதிகள் ஒவ்வொன்றிலிருந்தும் நான்கு மாதங்களுக்குள் முன்னிடலாம்.

முன்னிடுவதில் காலத்தாழ்வு தவிர்க்க முடியாததாக இருக்குமிடத்து வகையம்.

25. (1) விரைவுத்தேவை நிலை அல்லது தவிர்க்கமுடியாத விபத்தின் காரணமாக இந்தியாவில் எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணம் அல்லது பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை அல்லது ஆணை ஒன்றின்படி எதன் பொருட்டும் இதில் இதற்கு முன்பு குறித்துரைக்கப்பட்ட காலம் முடிவடையும்வரை பதிவு செய்வதற்காக முன்னிடப்படவில்லை எனின், பதிவாளர், முன்னிடுவதில் ஏற்படும் காலத் தாழ்வானது நான்கு மாதங்களுக்கு மேற்படாமல் இருக்கும் நேர்வுகளில், உரிய பதிவுக் கட்டணத்தொகைக்குப் பத்து மடங்கிற்கு மேற்படாத அபராதம் ஒன்றைச் செலுத்துவதன் பேரில், அத்தகைய ஆவணம் பதிவிற்காக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று பணிக்கலாம்.

(2) அத்தகைய பணிப்புரைக்கான விண்ணப்பம் எதுவும், சார்-பதிவாளரிடம் கொடுக்கப்படலாம், அவர் அதைத் தாம் எந்தப் பதிவாளருக்குக் கீழமைந்துள்ளாரோ அந்தப் பதிவாளருக்கு உடனடியாக மேலனுப்புதல் வேண்டும்.

26. தரப்பினர்கள் அனைவராலும் அல்லது அவர்களில் எவராலும் இந்தியாவுக்கு வெளியே எழுதிக் கொடுக்கப்பட்டிருப்பதாகப் புலப்படும் ஆவணம் ஒன்று இதற்கென இதில் இதற்கு முன்பு வகுத்துரைக்கப்பட்ட காலம் முடிவடையும் வரை பதிவு செய்வதற்காக முன்னிடப்படாதபோது, பதிவு செய்யும் அலுவலர்,— இந்தியாவுக்கு வெளியே எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணங்கள்.

(அ) அந்த ஆவணம் அவ்வாறு எழுதிக் கொடுக்கப்பட்டது என்றும்,

(ஆ) அது இந்தியாவிற்கு வந்து சேர்ந்த பின்பு நான்கு மாதங்களுக்குள் பதிவுசெய்வதற்காக முன்னிடப்பட்டிருக்கிறது என்றும்,

தெளிவுறக் காண்பாராயின், உரிய பதிவுக் கட்டணம் செலுத்தப்படுவதன் பேரில், அத்தகைய ஆவணத்தைப் பதிவுசெய்வதற்காக ஏற்றுக்கொள்ளலாம்.

27. ஒரு விருப்புறுதி ஆவணம் எந்த நேரத்திலும் இதில், இதற்குப் பின்பு, வகை செய்யப்பட்ட முறையில் பதிவு செய்வதற்காக முன்னிடப்படலாம் அல்லது வைப்பீடு செய்யப்படலாம். விருப்புறுதி ஆவணங்கள் எந்த நேரத்திலும் முன்னிடப் படலாம் அல்லது வைப்பீடு செய்யப்படலாம்.

## பகுதி V

## பதிவு செய்வதற்கான இடம்

28. இந்தப் பகுதியில் பிறவாறாக வகைசெய்யப்பட்டிருந்தாலன்றி, பிரிவு 17இன் உட்பிரிவு (1) இன் கூறு (அ), (ஆ), (இ), (ஈ) மற்றும் (உ)களில், பிரிவு 17இன் உட்பிரிவு (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய ஆவணம் ஒவ்வொன்றும், நிலையியல் சொத்தைப் பாதிக்கிற அளவுக்கு மற்றும் பிரிவு 18இன் கூறுகள் (அ), (ஆ), (இ) மற்றும் (இஇ) களில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் ஒவ்வொன்றும், எந்தச் சார்-பதிவாளரின் உள்-மாவட்டத்தில் அந்த ஆவணம் தொடர்பான சொத்து முழுவதும் அல்லது அதன் பகுதி எதுவும் அமைந்திருக்கிறதோ அந்தச் சார்-பதிவாளரின் அலுவலகத்தில் பதிவு செய்வதற்காக முன்னிடப்படுதல் வேண்டும். நிலம் தொடர்பான ஆவணங்களைப் பதிவு செய்வதற்கான இடம்.

29. (1) (பிரிவு 28 இல் குறிப்பிட்டதோர் ஆவணம் அல்லது ஒரு தீர்ப்பாணையின் அல்லது ஆணையின்படியாக அல்லாத) ஆவணம் ஒவ்வொன்றும், எந்தச் சார்-பதிவாளரின் உள்-மாவட்டத்தில் அந்த ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்டதோ அந்தச் சார்-பதிவாளரின் அலுவலகத்தில், அல்லது ஆவணத்தை எழுதிக் கொடுப்பவர்கள் மற்றும் அதன்படி உரிமை கோருகிறவர்கள் அனைவரும் அந்த மாநில அரசாங்கத்தின் கீழ் உள்ள பிற சார்-பதிவாளர் அலுவலகம் எதில் அது பதிவு செய்யப்பட வேண்டும் என்று விரும்புகிறார்களோ அந்தச் சார்-பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்வதற்காக முன்னிடலாம். பிற ஆவணங்களைப் பதிவு செய்வதற்கான இடம்.

(2) தீர்ப்பாணை அல்லது ஆணையின்படி ஒன்று, எந்தச் சார்-பதிவாளரின் உள் மாவட்டத்தில் முதன்முதலில் தீர்ப்பாணை அல்லது ஆணை பிறப்பிக்கப்பட்டதோ அந்தச் சார்-பதிவாளரின் அலுவலகத்தில் அல்லது அந்தத் தீர்ப்பாணை அல்லது ஆணை நிலையியல் சொத்தினைப் பாதிக்காதவிடத்து, அந்தத் தீர்ப்பாணை அல்லது ஆணையின்படி உரிமைகோருகிற அனைவரும் மாநில அரசாங்கத்தின் கீழுள்ள பிற சார்-பதிவாளர் அலுவலகம் எதில் அது பதிவு செய்யப்படவேண்டும் என்று விரும்புகிறார்களோ அந்தச் சார்பதிவாளரின் அலுவலகத்தில் பதிவுசெய்வதற்காக முன்னிடப்படலாம்.

30. (1) பதிவாளர் எவரும், தம் உளத்தேர்வின்படி தமக்குக் கீழமைந்த சார்-பதிவாளர் எவராலும் பதிவு செய்யப்பட்டிருக்கக்கூடிய எதனையும் பெற்றுக் கொண்டு பதிவுசெய்யலாம். குறித்த சில நேர்வுகளில் பதிவாளர்களால் பதிவு செய்யப்படுதல்.

(2) ஒரு மாகாணத் தலைநகர் எந்த மாவட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதோ அந்த மாவட்டத்தின் பதிவாளர் மற்றும் தில்லி மாவட்டத்தின் பதிவாளர் பிரிவு 28இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணம் தொடர்புடைய சொத்து இந்தியாவின் எந்தப் பகுதியில் அமைந்திருக்கிறது என்பதைக் கருத்தில் கொள்ளாமல் பெற்றுக்கொண்டு பதிவுசெய்யலாம்.

தனியார் குடியிருப்பிடங்களில் பதிவு செய்தல் அல்லது வைப்பீடு செய்வதற்காக ஏற்றுக் கொள்ளுதல்.

31. வழக்கமான நேர்வுகளில் இந்தச் சட்டத்தின்படியான ஆவணங்களின் பதிவு அல்லது வைப்பீடு, அதனைப் பதிவுசெய்வதற்கு அல்லது வைப்பீடு செய்வதற்கு ஏற்றுக்கொள்ள அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் அலுவலகத்தில் மட்டுமே செய்யப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக: தனியுறு காரணம் காட்டப்படுவதன் பேரில், அத்தகைய அலுவலர் பதிவு செய்வதற்கான ஆவணம் ஒன்றை முன்னிட அல்லது விருப்புறுதி ஆவணம் ஒன்றை வைப்பீடு செய்ய விரும்புகிறவர் எவருடைய குடியிருப்பிடத்திற்கும் வந்திருந்து அத்தகைய ஆவணத்தை அல்லது விருப்புறுதி ஆவணத்தைப் பதிவுசெய்வதற்காக அல்லது வைப்பீடு செய்வதற்காக ஏற்றுக்கொள்ளலாம்.

## பகுதி VI

## பதிவு செய்வதற்காக ஆவணங்களை முன்னிடுதல்

பதிவு செய்வதற்காக ஆவணங்களை முன்னிட வேண்டியவர்கள்.

32. பிரிவுகள் 31, 88, 89இல் குறிப்பிடப்பட்டுள்ள நேர்வுகளைத் தவிர, இந்தச் சட்டத்தின்படி பதிவுசெய்யப்பட வேண்டிய ஆவணம் ஒவ்வொன்றும், அவ்வாறு பதிவுசெய்தல் கட்டாயத்தின்பேரில் இருந்தாலும் அல்லது தேர்வுரிமையின் பேரில் இருந்தாலும்,—

(அ) அதை எழுதிக் கொடுக்கும் அல்லது அதன்படி உரிமை கோரும் அல்லது தீர்ப்பாணை அல்லது ஆணை ஒன்றின் படியாக இருக்கும் நேர்வில், அந்த தீர்ப்பாணை அல்லது ஆணையின்படி உரிமை கோரும் யாராவது ஒருவரால், அல்லது

(ஆ) அத்தகையவரின் சார்பாற்றுநரால் அல்லது உரிமையளிக்கப்பெற்றவரால், அல்லது

(இ) இதில் இதன் பின்னர் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் எழுதிக் கொடுக்கப்பட்டு உறுதியொப்பமிடப்பட்டுள்ள அதிகார ஆவணத்தின் வாயிலாக, அத்தகையவரின் சார்பாற்றுநரின் அல்லது உரிமையளிக்கப்பெற்றவரின் உரியவாறு அதிகாரமளிக்கப்பட்டுள்ள முகவரால்,

அதற்குரிய பதிவுசெய்யும் அலுவலகத்தில் முன்னிடப்படுதல் வேண்டும்.

பிரிவு 32 இன் நோக்கங்களுக்காக ஏற்பளிக்கத்தக்க அதிகார ஆவணம்.

33. (1) பிரிவு 32 இன் நோக்கங்களைப் பொறுத்தவரையில், பின்வரும் அதிகார ஆவணங்கள் மட்டுமே ஏற்பளிக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

(அ) அதிகார ஆவணத்தை எழுதிக்கொடுக்கும் நேரத்தில், முதல்வர், இந்தச் சட்டம் அப்போதைக்குச் செல்லாற்றலில் இருக்கும் இந்தியாவின் பகுதி எதிலும் குடியிருப்பவராக இருப்பின், எந்தப் பதிவாளரின் அல்லது சார்-பதிவாளரின் மாவட்டம் அல்லது உள்மாவட்டத்தில் அந்த முதல்வர் குடியிருந்து வருகிறாரோ அந்தப் பதிவாளர் அல்லது சார்-பதிவாளரின் முன்பாக எழுதிக்கொடுக்கப்பட்டு மற்றும் அவரால் உறுதியொப்பமிடப்பட்டதுமான ஓர் அதிகார ஆவணம்;

(ஆ) மேலே சொல்லப்பட்ட நேரத்தில் முதல்வர், இந்தியாவில் இந்தச் சட்டம் செல்லாற்றலில் இல்லாத பகுதி எதிலும் குடியிருப்பவராக இருப்பின், குற்றவியல் நடுவர் எவர் முன்பாகவும் எழுதிக் கொடுக்கப்பட்டு மற்றும் உறுதியொப்பமிடப்பட்ட ஓர் அதிகார ஆவணம்;

(இ) மேலே சொல்லப்பட்ட நேரத்தில் முதல்வர், இந்தியாவில் குடியிருக்கவில்லை எனில், சான்றுறுதி அலுவலர், நீதிமன்றம் எதனின் நீதிபதி, குற்றவியல் நடுவர் அல்லது இந்தியத்துணைத் தூதர் அல்லது உதவித் துணைத்தூதர் எவரின் அல்லது மைய அரசாங்கத்தின் சார்பாற்றுநர் முன்பும் எழுதிக்கொடுக்கப்பட்ட மற்றும் அவரால் உறுதியொப்பம் இடப்பட்ட ஓர் அதிகார ஆவணம்:

வரம்புரையாக: பின்வருபவர்கள், இந்தப் பிரிவின் கூறுகள் (அ) இல் மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்டவாறான அதிகார ஆவணம் எதனையும் எழுதிக் கொடுக்கும் நோக்கத்திற்காக பதிவு செய்யும் அலுவலகத்தில் அல்லது நீதிமன்றம் எதிலும் வருகைதரும்படி வேண்டுறுத்தப்படுதல் ஆகாது, அவர்கள்:—

(i) தமது உடல் தளர்ச்சியின் காரணமாக இடர் அல்லது கடுமையான வசதியின்மை ஏற்படாமல் வருகைதருவதற்கு இயலாதிருப்பவர்கள்;

(ii) உரிமைவழக்கு அல்லது குற்றவழக்கு நீதிமுறை ஆணையின்படி சிறையில் இருப்பவர்கள்;

(iii) நீதிமன்றத்தில் நேரடியாகத் தோன்றுவதற்குச் சட்டத்தால் விலக்களிக்கப்பட்டிருப்பவர்கள்.

விளக்கம்:-இந்த உட்பிரிவில் "இந்தியா" என்பது, பொது வகையங்கள் சட்டம், 10/1897 1897இன் பிரிவு 3இன் கூறு (28)இல் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான "இந்தியா" என்று பொருள்படும்.

(2) அத்தகையவர் ஒவ்வொருவரையும் பொறுத்தவரை, நேர்வுக்கேற்ப, பதிவாளர் அல்லது சார்-பதிவாளர் அல்லது குற்றவியல் நடுவர் அந்த அதிகார ஆவணமானது, முதல்வராக இருக்கிறதாகக் கருதப்படுகிற ஒருவரால், தன்னிச்சையாக எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெளிவுறக்காண்பாராயின், மேலே சொல்லப்பட்ட அலுவலகம் அல்லது நீதிமன்றத்திற்கு அவரை நேரில் வருகை தரும்படி வேண்டுறுத்தாமல் அதில் சான்றொப்பம் இடலாம்.

(3) தன்னிச்சையாக எழுதிக் கொடுக்கப்பட்டது என்பது பற்றிய சான்றினைப் பெறுவதற்குப் பதிவாளர் அல்லது சார்-பதிவாளர் அல்லது குற்றவியல் நடுவர், முதல்வராகக் கருதப்படுகிறவரின் வீட்டிற்கு அல்லது அவர் எங்கு அடைத்து வைக்கப்பட்டிருக்கிறாரோ அந்தச் சிறைக்குத் தாமே சென்று அவரை விசாரணை செய்யலாம் அல்லது அவரை விசாரிக்க ஆணை ஒன்றைப் பிறப்பிக்கலாம்.

(4) இந்தப் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகார ஆவணம் எதனையும் இதற்கென இதில் இதற்கு முன்பு குறிப்பிடப்பட்டுள்ள ஒருவரின் அல்லது நீதி மன்றத்தின் முன்பு எழுதிக்கொடுக்கப்பட்டிருப்பதாக அதைப் பார்த்த மாத்திரத்திலேயே புலப்படும்போது, மேற்கொண்டும் மெய்ப்பித்தல் இன்றி, அதை முன்னிலைப்படுத்துவதன் வாயிலாக மெய்ப்பிக்கலாம்.

பதிவு செய்யும் அலுவலர் பதிவு செய்வதற்கு முன்னர் விசாரணை செய்தல்.

34. (1). இந்தப் பகுதியில் மற்றும் பிரிவு 41, 43 45, 69, 75, 77, 88 மற்றும் 89இல் அடங்கியுள்ள வகையங்களுக்கு உட்பட்டு, ஆவணம் எதனையும் எழுதிக்கொடுக்கும் ஆட்கள் அல்லது மேலே சொல்லப்பட்டவாறான அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் சார்பாற்றுநர்கள், உரிமையளிக்கப்பெற்றவர்கள் அல்லது முகவர்கள், பிரிவுகள் 23,24, 25 மற்றும் 26 ஆகியவற்றின்படி முன்னிடுவதற்கு அனுமதிக்கப்பட்ட காலத்திற்குள் பதிவுசெய்யும் அலுவலர்முன் முன்னிலையானாலன்றி, அத்தகைய ஆவணம் எதுவும் இந்தச் சட்டத்தின்படி பதிவு செய்யப்படுதல் ஆகாது:

வரம்புரையாக: விரைவுத்தேவை அல்லது தவிர்க்க இயலாத விபத்தின் காரணமாக, அத்தகைய ஆட்கள் அனைவரும் அவ்வாறு முன்னிலையாகாமல் இருப்பின், நேரில் வருவதில் ஏற்படும் காலத்தாழ்வானது, நான்கு மாதங்களுக்கு மேற்படாமல் இருக்குமிடத்து, பிரிவு 25இன்படி செலுத்தப்படத்தக்க பணத்தண்டம், ஏதேனுமிருப்பின், அதனுடன் உரிய பதிவுக் கட்டணத்தின் தொகைக்குப் பத்துமடங்கிற்கு மேற்படாத ஒரு பணத்தண்டத்தைச் செலுத்துவதன்மீது, அந்த ஆவணம் பதிவுசெய்யப்படலாம் என்று பதிவாளர் பணிக்கலாம்.

(2) உட்பிரிவு (1) இன்படியான முன்னிலையாதல் ஒரே நேரத்தில் அல்லது வெவ்வேறு நேரங்களில் இருக்கலாம்.

(3) பதிவுசெய்யும் அலுவலர் அதன்பேரில்,-

(அ) எந்த ஆட்களால் அத்தகைய ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்டிருப்பதாகப் புலப்படுகிறதோ அந்த ஆட்களால் அது எழுதிக்கொடுக்கப்பட்டதா, இல்லையா என்பதை விசாரித்தல் வேண்டும்;

(ஆ) தமக்கு முன் முன்னிலையாகி ஆவணத்தைத் தாம் எழுதிக் கொடுத்திருப்பதாகச் சொல்லப்படுகிற ஆட்களின் அடையாளம் பற்றித் தாமே தெளிவுறக்காணுதல் வேண்டும்; மற்றும்

(இ) சார்பாற்றுநராக, உரிமையளிக்கப்பெற்றவராக அல்லது முகவராக முன்னிலையாகும் எவர் ஒருவருக்குமான நேர்வில், அவ்வாறு முன்னிலையாவதற்கு அத்தகையவரின் உரிமையைப் பற்றித் தாமே தெளிவுறக்காணுதல் வேண்டும்.

(4) உட்பிரிவு (1) இன் வரம்புரையின்படியான பணிப்புரை ஒன்றிற்கான விண்ணப்பம் எதுவும் சார்-பதிவாளர் ஒருவரிடம் கொடுக்கப்படலாம், அவர் தாம் எந்தப் பதிவாளருக்குக் கீழமைந்துள்ளரோ அந்தப் பதிவாளருக்கு உடனடியாக அனுப்புதல் வேண்டும்.

(5) இந்தப் பிரிவிலுள்ள எதுவும், தீர்ப்பாணைகள் அல்லது ஆணைகளின் படிகளுக்குப் பொருந்தாது.

எழுதிக் கொடுத்ததை ஏற்றுக்கொள்ளும் போது, மற்றும் மறுத்துவிடும் போது முறையே நடைமுறை.

35.(1) (அ) அந்த ஆவணத்தை எழுதிக்கொடுக்கும் ஆட்கள் அனைவரும் பதிவுசெய்யும் அலுவலரின் முன்பு நேரடியாக முன்னிலையாகி மற்றும் அவருக்கு நேர்முகமாகத் தெரிந்தவர்களாக இருப்பின், அல்லது அவர்கள் தம்மை யாரென்று எடுத்துரைக்கிறார்களோ அவர்கள்தாம் என பிறவாறாக அவர் தெளிவுறக்காண்பாராயின், ஆவணத்தை எழுதிக்கொடுத்ததாக ஏற்றுக்கொள்வராயின், அல்லது

(ஆ) எவர் ஒருவரும் சார்பாற்றுநர், உரிமையளிக்கப் பெற்றவர் அல்லது முகவர் ஒருவர் மூலமாக முன்னிலையாகின்ற நேர்வில், அத்தகைய சார்பாற்றுநர், உரிமையளிக்கப்பெற்றவர் அல்லது முகவர் எழுதிக்கொடுத்ததாக ஏற்றுக்கொள்வராயின், அல்லது

(இ) ஆவணத்தை எழுதிக் கொடுத்த ஆள் எவரும் இறந்து விடுவாராயின், மற்றும் அவருடைய சார்பாற்றுநர் அல்லது உரிமையளிக்கப்பெற்றவர் பதிவுசெய்யும் அலுவலர் முன்பு முன்னிலையாகி எழுதிக் கொடுத்ததாக ஏற்றுக்கொள்வாராயின்,

பதிவு செய்யும் அலுவலர் அந்த ஆவணத்தைப் பிரிவுகள் 58 முதல் 61 வரை இரண்டும் உள்ளடங்கலாகப் பணிக்கப்பட்டுள்ளவாறு பதிவு செய்தல் வேண்டும்.

(2) பதிவு செய்யும் அலுவலர், தம்முன் முன்னிலையாகும் ஆட்கள் தம்மை யாரென்று கூறுகிறார்களோ அவர்கள் தாம் என்று, தாமே தெளிவுறக் காணும் பொருட்டு அல்லது இந்தச் சட்டத்தின் கருத்தின்படியான பிற நோக்கம் எதற்காகவும், அவரது அலுவலகத்தில் முன்னிலையாகும் எவர் ஒருவரையும் விசாரணை செய்யலாம்.

(3) (அ) அந்த ஆவணம் எந்த ஆளால் எழுதிக்கொடுக்கப்பட்டதாகப் புலப்படுகிறதோ, அவர் எழுதிக்கொடுத்ததை மறுத்துவிடுவாராயின், அல்லது

(ஆ) அத்தகைய ஆள் எவரும் ஓர் உரிமைவயதடையாதவராக ஒரு முழுமூடராக அல்லது ஒரு பித்தராக பதிவுசெய்யும் அலுவலருக்குத் தோன்றுவாராயின், அல்லது

(இ) எந்த ஆளால் அந்த ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்டிருப்பதாகப் புலப்படுகிறதோ அந்த ஆள் இறந்துவிட்டிருந்து, அவருடைய சார்பாற்றுநர் அல்லது உரிமையளிக்கப்பெற்றவர் அது எழுதிக் கொடுக்கப்பட்டதை மறுத்துவிடுவாராயின்,

பதிவு செய்யும் அலுவலர், அவ்வாறு மறுத்துவிடுகிற, முன்னிலையாகும் அல்லது இறந்துபோனவருடைய ஆவணத்தைப் பதிவுசெய்ய மறுத்தல் வேண்டும்:

*வரம்புரையாக:* அத்தகைய அலுவலர் பதிவாளர் ஒருவராக இருக்குமிடத்து அவர், பகுதி XII இல் குறித்துரைக்கப்பட்ட நடைமுறையைப் பின்பற்றுதல் வேண்டும்:

**மேலும் வரம்புரையாக:** மாநில அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, அந்த அறிவிக்கையில் பெயர் குறிக்கப்பட்டுள்ள சார்பதிவாளர் எவரும், எழுதிக் கொடுக்கப்பட்டது மறுத்துவிடப்பட்ட அந்த ஆவணங்களைப் பொறுத்தவரையில், இந்த உட்பிரிவு மற்றும் பகுதி XII இன் நோக்கங்களுக்காக ஒரு பதிவாளராகக் கொள்ளப்படுதல் வேண்டும் என்று விளம்பலாம்.

## பகுதி VII

## எழுதிக்கொடுப்பவர்களையும் சான்றளிப்பவர்களையும் முன்னிலையாகக் கட்டாயப்படுத்துதல்

*36.* பதிவு செய்வதற்காக ஆவணம் எதையும் முன்னிடுகிற அல்லது அவ்வாறு முன்னிடப்படுவதற்குத் தகுதி பெற்றுள்ள ஆவணம் எதன்படியும் உரிமைகோருகிற எவர் ஒருவரும், அத்தகைய ஆவணத்தைப் பதிவுசெய்வதற்கு எவர் முன்னிலையாவது அல்லது சான்று உரைப்பது தேவையாக இருக்கிறதோ அவர் எவரொருவரும் முன்னிலையாக வேண்டும் என விரும்புவாராயின், பதிவுசெய்யும் அலுவலர் தம் உளத்தேர்வின்படி, நேரில் அல்லது உரியவாறு அதிகாரமளிக்கப்பட்ட முகவர் வாயிலாக, பதிவுசெய்யும் அலுவலகத்தில் அந்த அழைப்பாணையில் குறிப்பிடப்படுகிறவாறு மற்றும் அதில் குறிக்கப்பட்டுள்ள நேரத்திலும் முன்னிலையாகும்படி வேண்டுறுத்துகிற அழைப்பாணை ஒன்றைப் பிறப்பிக்க கோரலாம். எழுதிக் கொடுப்பவர் அல்லது சான்றளிப்பவர் நேரில் வருகை தருவது விரும்பப் படுகிறவிடத்து நடைமுறை.

*37.* அலுவலர் அல்லது நீதிமன்றம், அத்தகைய நேர்வுகளில் செலுத்தப்படத்தக்க ஏவலரின் கட்டணத்தைப் பெறுவதன்மீது அழைப்பாணைகளை அதன்படி பிறப்பித்தல் வேண்டும் மற்றும் எவர் அவ்வாறு முன்னிலையாவதற்கு வேண்டுறுத்தப்படுகிறாரோ அவருக்கு அதனைச் சார்வு செய்வித்தல் வேண்டும். அழைப்பாணை களைப் பிறப் பிப்பதற்கும் அவற்றைச் சார்வு செய்வதற்குமான அலுவலர் அல்லது நீதிமன்றம்.

*38.(1) (அ)* தமது உடல் தளர்ச்சியின் காரணமாக, இடர் அல்லது கடுமையான வசதிக்கேடு ஏற்படாமல் பதிவுசெய்யும் அலுவலகத்திற்கு வர இயலாதிருக்கிற ஆள் ஒருவர், அல்லது பதிவு செய்யும் அலுவலகத்திற்கு நேரில் வருவதற்கு விலக்களிக்கப் பட்டவர்கள்.

(ஆ) உரிமைவழக்கு அல்லது குற்றவழக்கு நீதிமுறைக்கட்டளையின்படி சிறையில் இருக்கிற ஆள் ஒருவர், அல்லது

(இ) நீதிமன்றத்தில் நேரில் முன்னிலையாவதினின்று சட்டத்தின் வாயிலாக விலக்களிக்கப்பட்டவர்களும், இதில் இதற்குப் பின்னர் அடங்கியுள்ள வகையம் இல்லையெனில், பதிவுசெய்யும் அலுவலகத்தில் முன்னிலையாவதற்கு வேண்டுறுத்தப்படக்கூடியவர்களுமான ஆட்கள்,

அவ்வாறு முன்னிலையாவதற்கு வேண்டுறுத்தப்படுதல் ஆகாது.

*(2)* அத்தகைய ஆள் ஒவ்வொருவரையும் பொறுத்த மட்டில், பதிவுசெய்யும் அலுவலர், தாமே அத்தகைய ஆளின் வீட்டுக்குச் சென்று விசாரணை செய்தல் வேண்டும் அல்லது அவரை விசாரண்ண செய்வதற்காக ஆணை ஒன்றைப் பிறப்பித்தல் வேண்டும்.

*39.* அழைப்பாணைகள், ஆணைகள் மற்றும் சான்று உரைப்பவர்களின் வருகையினைக் கட்டாயப்படுத்துதல் பற்றி மற்றும் உரிமையியல் நீதிமன்றங்களின் முன் உள்ள உரிமைவழக்குகளில் அவர்களுடைய பணியூதியங்களுக்காக, அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டமானது, மேலே சொல்லப்பட்டவாறு அல்லாமல், தேவையான மாறுதல்களுடன், இந்தச் சட்டத்தின் வகையங்களின்படி பிறப்பிக்கப்பட்ட அழைப்பாணை அல்லது ஆணை எதன்மீதும் மற்றும் நேரில் முன்னிலையாகும்படி ஆணையிடப்பட்ட ஆள் எவருக்கும் பொருந்தும். அழைப் பாணைகள், ஆணைகள் மற்றும் சான்றுரைப்பவர்கள் பற்றிய சட்டம்.

## பகுதி VIII

## விருப்புறுதி ஆவணங்களையும் மகவேற்புக்கான அதிகார ஆவணங்களையும் முன்னிடுதல்

விருப்புறுதி ஆவணங் களையும் மகவேற்புக்கான அதிகார ஆவணங் களையும் முன்னிடுவதற்கு உரிமை கொண்டவர்கள்.

40.(1) விருப்புறுதி ஆவணம் அல்லது அவரது இறப்புக்குப் பின்னர் விருப்புறுதி ஆவணம் ஒன்றின்படி அதனை நிறைவேற்றுபவராக அல்லது பிறவாறாக உரிமைகோருகிற ஆள் எவரும், அதனைப் பதிவாளர் அல்லது சார்-பதிவாளர் எவரிடமும் பதிவு செய்வதற்காக முன்னிடலாம்.

(2) அதிகாரம் கொடுத்தவர் அல்லது அவருடைய இறப்புக்குப் பின்னர் மகவேற்புக்கான அதிகார ஆவணம் எதன்படியும் அந்த அதிகாரத்தைப் பெறுபவர் அல்லது மகவேற்பு மகன் அதனைப் பதிவுசெய்வதற்காகப் பதிவாளர் அல்லது சார்-பதிவாளர் எவரிடமும் முன்னிடலாம்.

விருப்புறுதி ஆவணங்களை மற்றும் மகவேற்புக்கான அதிகார ஆவணங்களைப் பதிவு செய்தல்.

41.(1) விருப்புறுதி ஆவணம் அல்லது அதிகாரம் கொடுத்தவரால் பதிவு செய்வதற்காக முன்னிடப்பட்ட விருப்புறுதி ஆவணம் அல்லது மகவேற்புக்கான அதிகார ஆவணம் ஒன்று, பிற ஆவணம் எதுவும் பதிவு செய்யப்படுவது போன்ற அதே முறையில் பதிவு செய்யப்படலாம்.

(2) முன்னிடுவதற்கு உரிமைபெற்றுள்ள ஆள் எவராலும், பதிவுசெய்வதற்காக முன்னிடப்பட்ட விருப்புறுதி ஆவணம் அல்லது மகவேற்புக்கான அதிகார ஆவணம் ஒன்று—

(அ) அதே விருப்புறுதி ஆவணம் அல்லது அதிகார ஆவணம் விருப்புறுதியாளரால் அல்லது, நேர்வுக்கேற்ப, அதிகாரம் கொடுத்தவரால் எழுதிக் கொடுக்கப்பட்டது என்று,

(ஆ) விருப்புறுதி ஆவணம் அல்லது அதிகாரம் கொடுத்தவர் இறந்து விட்டார் என்று, மற்றும்

(இ) அந்த விருப்புறுதி ஆவணத்தை அல்லது அதிகார ஆவணத்தை முன்னிடும் ஆள், பிரிவு 40 இன்படி அதனை முன்னிடுவதற்கு உரிமைபெற்றிருக்கிறார் என்று,

பதிவுசெய்யும் அலுவலர் தெளிவுறக் காண்பாராயின், அது பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

## பகுதி IX

## விருப்புறுதி ஆவணங்களை வைப்பீடு செய்தல்

விருப்புறுதி ஆவணங்களை வைப்பீடு செய்தல்.

42. விருப்புறுதியாளர் எவரும், நேர்முகமாகவோ அல்லது உரியவாறு அதிகாரமளிக்கப்பட்ட முகவர் வாயிலாகவோ தமது விருப்புறுதி ஆவணத்தை, விருப்புறுதி ஆவணத்தின் பெயர், அவருடைய முகவர் (எவரேனுமிருப்பின்) அவருடைய பெயர், மற்றும் அந்த ஆவணத்தின் தன்மைபற்றிய உரை ஆகியவை மேல் எழுதப்பட்டு மூடி இலச்சினையிடப்பட்ட உறையில் வைப்பீடு செய்யலாம்.

விருப்புறுதி ஆவணங்கள் வைப்பீடு செய்யப்பட்ட தன் பேரில் நடைமுறை.

43.(1) அத்தகைய உறையினைப் பெறுவதன்பேரில், வைப்பீட்டுக்காக விருப்புறுதி ஆவணத்தை முன்னிடுகிற அவரே, அந்த விருப்புறுதியாளர் அல்லது அவருடைய முகவர் எனப் பதிவாளர் தெளிவுறக்காண்பாராயின், அவர் தமது 5 ஆம் எண் பதிவுப்புத்தகத்தில் மேலே சொல்லப்பட்ட மேலெழுத்துக் குறிப்பை எடுத்தெழுதுதல் வேண்டும், மேலும், அத்தகைய முன்னிடப்பட்ட மற்றும் பெறப்பட்ட ஆண்டு, மாதம், நாள் மற்றும் நேரத்தையும், விருப்புறுதியாளரின் அல்லது அவருடைய முகவரின் அடையாளத்திற்குச் சான்றாக இருக்கலாகும் ஆட்கள் எவரின் பெயர்களையும், அந்த உறையின்மீது தெளிவாகப் பொறிக்கப்பட்டிருக்கலாகும் எதனையும், அதே புத்தகத்திலும் சொல்லப்பட்ட அந்த உறையின்மீதும் குறித்தல் வேண்டும்.

(2) பதிவாளர், அதன்பிறகு மூடி இலச்சினையிடப்பட்ட அந்த உறையை, அவருடைய தீப்பற்றாப் பெட்டியில் இட்டுத் தம்மிடம் வைத்திருத்தல் வேண்டும்.

*பிரிவு 42 இன்படி வைப்பீடு செய்யப்பட்டுள்ள இலச்சினை யிடப்பட்ட உறையினைத் திரும்பப் பெறுதல்.*

44. அத்தகைய உறையினை வைப்பீடு செய்திருக்கிற விருப்புறுதியாளர் அதனைத் திருப்பிப்பெற விரும்புவராயின், அவர் நேர்முகமாகவோ அல்லது உரியவாறு அதிகாரமளிக்கப்பட்ட முகவர் வாயிலாகவோ, அதனை வைப்பீட்டில் வைத்திருக்கும் பதிவாளருக்கு விண்ணப்பிக்கலாம். மேலும் அந்தப் பதிவாளர் அந்த விண்ணப்பதாரர் உள்ளபடியே அந்த விருப்புறுதியாளர் அல்லது அவருடைய முகவர் என்று தெளிவுறக்காண்பாராயின், அந்த உறையினை அதன்படியே ஒப்படைத்தல் வேண்டும்.

*வைப்பீடு செய்பவர் இறந்ததன்பேரில் நடவடிக்கை.*

45. (1) பிரிவு 43 இன்படி மூடி இலச்சினையிடப்பட்ட உறை ஒன்றை வைப்பீடு செய்திருக்கிற விருப்புறுதியாளர் இறந்ததன்பேரில், அதனைத் திறப்பதற்காக அதனை வைப்பீட்டில் வைத்திருக்கிற பதிவாளருக்கு விண்ணப்பம் செய்யப்படுமாயின், மற்றும் அந்தப் பதிவாளர், விருப்புறுதியாளர் இறந்துவிட்டதாகத் தெளிவுறக்காண்பாராயின், அவர் விண்ணப்பம் செய்பவரின் முன்னிலையில் அந்த உறையினைத் திறத்தல் வேண்டும், மற்றும் அதன் உள்ளடக்கத்தை அவருடைய 3 ஆம் எண் புத்தகத்தில் விண்ணப்பம் செய்பவரின் செலவில் பார்த்து எழுதுமாறு செய்வித்தல் வேண்டும்.

(2) அத்தகைய படி எடுக்கப்பட்டதன் பின்பு, பதிவாளர் மூல விருப்புறுதி ஆவணத்தை மறுவைப்பீடு செய்தல் வேண்டும்.

*குறித்த சில சட்டங்களுக்கு மற்றும் நீதிமன்றங்களின் அதிகாரங்களுக்குக் காப்பு.*

46.(1) இதில் இதற்கு முன்பு அடங்கியுள்ள எதுவும், இந்திய வாரிசுரிமைச் சட்டம், 1865 இன் பிரிவு 259 அல்லது விருப்புறுதி ஆவண மெய்ப்பிதழ் மற்றும் நிருவாக ஆட்சிச் சட்டம், 1881 இன் பிரிவு 84 இன் வகையங்களை அல்லது விருப்புறுதி ஆவணம் எதனையும் தாக்கல் செய்யுமாறு நீதிமன்றம் எதனின் ஆணையின் வாயிலாகக் கட்டாயப்படுத்தும் அதிகாரத்தைப் பாதித்தல் ஆகாது.

*10/1865.*
*5/1881.*

(2) அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்பட்டிருக்கும் போது, பிரிவு 45 இன்படி, ஏற்கெனவே அந்த விருப்புறுதி ஆவணத்தினைப் பார்த்து எழுதப்பட்டிருந்தாலன்றி, பதிவாளர் அந்த உறையினைத் திறந்து, அந்த விருப்புறுதி ஆவணத்தைத் தமது 3 ஆம் எண் புத்தகத்தில் பார்த்து எழுதுமாறு செய்வித்தல் வேண்டும், மற்றும் அவ்வாறு பார்த்து எழுதப்பட்டதன்பேரில், மேலே சொல்லப்பட்ட ஆணையை ஒட்டி, அந்த மூல விருப்புறுதி ஆவணம் நீதிமன்றத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டிருக்கிறது என்றவொரு குறிப்பினை எழுதி வைத்தல் வேண்டும்.

## பகுதி X

## பதிவு செய்தல் மற்றும் பதிவு செய்யாது விடுதலின் விளைவுகள்

*பதிவு செய்யப்பட்ட ஆவணம் செயற்படத் தொடங்கும் நேரம்.*

47. பதிவு செய்யப்பட்ட ஆவணம், ஒன்று, அது பதிவு செய்வதற்கு வேண்டுறுத்தப்படாத அல்லது பதிவு செய்யப்படாத ஓர் ஆவணமாக இருப்பின், எந்த நேரத்தில் இருந்து செயற்பாடு உடையதாக இருக்கத் தொடங்கியிருக்குமோ, அந்த நேரத்தில் இருந்து செயற்பாடுடையதாக இருக்குமே தவிர, பதிவு செய்யப்பட்ட நேரத்திலிருந்து அன்று.

*சொத்து தொடர்பான பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் வாய்மொழி உடன்பாடுகளை மீறி செல்திறம் பெறுதல்.*

48. இந்தச் சட்டத்தின்படி உரியவாறு பதிவு செய்யப்பட்டதும், அசைவியல் சொத்தாகவும் அல்லது நிலையியில் சொத்தாகவும் இருந்தாலும் அத்தகைய சொத்து எதற்கும் தொடர்புடையதுமான விருப்புறுதி ஆவணமல்லாத ஆவணங்கள் அனைத்தும், அத்தகைய சொத்துத் தொடர்பான வாய்மொழி உடன்பாடு அல்லது விளம்புகையுடன் சேர்த்து அல்லது அதனைத் தொடர்ந்து, உடைமையில் ஒப்படைக்கப்பட்டிருந்தாலன்றி, மற்றும் அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதன்படியும் அதுவே செல்லுநிலையான உரிமைமாற்றமாக அமைந்தாலன்றி, அந்த உடன்பாடு அல்லது விளம்புகை எதனையும் மீறி செல்திறம் பெறும்:

*4/1882.* **வரம்புரையாக:** சொத்து உரிமைமாற்றச் சட்டம், 1882 இன் பிரிவு 58 இல் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான ஓர் உரிமை ஒப்பாவணத்தின் வைப்பீட்டு அடைமானமானது, அதே சொத்தின் தொடர்பாக பின்னர் எழுதிக் கொடுக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட அடைமான ஒப்பாவணம் எதனையும் மீறி செல்திறம் பெறும்.

பதிவு செய்ய வேண்டுறுத்தப படுகிற ஆவணங்களைப பதிவு செய்யாது விடுதலின் விளைவு.

49. பிரிவு 17 இன்படி அல்லது சொத்து உரிமைமாற்றச் சட்டம், 1882 இன் வகையம் எதன்படியும் பதிவுசெய்தல் வேண்டுறுத்தப்படுகிற ஆவணம் எதுவும்,— 4/1882.

(அ) அதில் உள்ளடங்கியுள்ள நிலையியல் சொத்து எதனையும், அல்லது

(ஆ) மகவேற்புக்கு வழங்கப்பட்ட அதிகாரம் எதனையும், அல்லது

(இ) அத்தகைய சொத்தினைப் பாதிக்கும் அல்லது அத்தகைய அதிகாரத்தை வழங்கும் நடவடிக்கை எதற்கும் சான்றாக ஏற்கப்பட்ட எதனையும்,

அது பதிவு செய்யப்பட்டிருந்தாலன்றி, அதனைப் பாதித்தல் ஆகாது:

**வரம்புரையாக:** நிலையியல் சொத்தினைப் பாதிப்பதும் இந்தச் சட்டத்தின்படி அல்லது சொத்தின் உரிமைமாற்றச் சட்டம், 1882 இன்படி பதிவு செய்ய வேண்டுறுத்தப்படுகிறதுமான பதிவு செய்யப்படாத ஆவணம் ஒன்று, குறித்த வகைத் தீருதவிச் சட்டம், 1877 இன் அத்தியாயம் II இன்படி குறித்துரைக்கப்பட்டவாறு நிறைவேற்றுவதற்கான ஓர் உரிமைவழக்கில், ஒப்பந்தம் ஒன்றிற்கான சான்றாக அல்லது சொத்து உரிமைமாற்றச் சட்டம், 1882 இன் பிரிவு 53(அ) இன் நோக்கங்களுக்கான ஒப்பந்தம் ஒன்றின் பகுதி நிறைவேற்றத்திற்கான சான்றாக அல்லது பதிவு செய்யப்பட்ட முறையாவணம் ஒன்று வேண்டுறுத்தப்படாத சார் நடவடிக்கை எதற்குமான சான்றாக ஏற்றுக் கொள்ளப்படலாம். 4/1982 1/1877 4/1882

நிலம் தொடர்பான பதிவு செய்யப்பட்ட குறித்த சில ஆவணங்கள் பதிவு செய்யப்படாத ஆவணங்களை மீறிசெல்திறம் பெறுதல்.

50.(1) பிரிவு 17 இன் கூறுகள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) இல், பிரிவு 18 இன் உட்பிரிவு (1) இலும் மற்றும் கூறுகள் (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள வகையிலான ஆவணங்கள் ஒவ்வொன்றும், உரியவாறு பதிவு செய்யப்பட்டிருப்பின், அதில் உள்ளடங்கியுள்ள சொத்தினைக் குறித்து, அத்தகைய பதிவு செய்யப்படாத ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தைப் போன்று அதே தன்மையுடையதாக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும், அதே சொத்து தொடர்பானதும், தீர்ப்பாணை அல்லது ஆணை ஒன்றாக இல்லாததுமான பதிவு செய்யப்படாத ஆவணம் ஒவ்வொன்றையும் மீறி செல்திறம் பெறும்.

(2) உட்பிரிவு (1) இல் உள்ள எதுவும், பிரிவு 17 இன் உட்பிரிவு (1) இன் வரம்புரையின்படி விலக்களிக்கப்பட்டுள்ள குத்தகைகளுக்கு அல்லது அதே பிரிவின் உட்பிரிவு (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணம் எதற்கும் அல்லது இந்தச் சட்டத்தின் தொடக்கத்தின்போது முன்னுரிமை பெற்றிராத பதிவு செய்யப்பட்ட ஆவணம் எதற்கும் பொருந்தாது.

**விளக்கம்:** பதிவு செய்யப்படாத அத்தகைய ஆவணம் எந்த இடத்தில் மற்றும் எந்த நேரத்தில் எழுதிக்கொடுக்கப்பட்டதோ அந்த இடத்திலும் நேரத்திலும், சட்ட எண் XVI, 1864 அல்லது இந்தியப் பதிவுச் சட்டம், 1866 செல்லாற்றலில் இருந்த நேரத்தில் "பதிவு செய்யப்படாதது" என்பது, அத்தகைய சட்டத்தின்படி பதிவு செய்யப்படாதது என்று பொருள்படும், மற்றம் ஆவணமானது 1871, ஜூலை முதல் தேதிக்குப் பின்னர் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளவிடத்து, இந்தியப் பதிவுச் சட்டம், 1871 இன்படி அல்லது இந்தியப் பதிவுச் சட்டம், 1877 இன்படி அல்லது இந்தச் சட்டத்தின்படி பதிவு செய்யப்படாதது என்று பொருள்படும். 20/1866. 8/1871. 3/1877.

## பகுதி XI

## பதிவுசெய்யும் அலுவலர்களின் கடமைகளும் அதிகாரங்களும்

### (அ) பதிவுப் புத்தகங்கள் மற்றும் பொருளடக்க அட்டவணைகளைப் பற்றியன.

பல்வேறு அலுவலகங்களில் வைக்கப்பட வேண்டிய பதிவுப் புத்தகங்கள்.

51.(1) பின்வரும் புத்தகங்கள் இதில் இதற்குப் பின்னர் குறிப்பிடப்பட்ட பல்வேறு அலுவலகங்களில் வைத்துவரப்படுதல் வேண்டும், அதாவது:—

(அ) பதிவு அலுவலகங்கள் அனைத்திலும்—

1 ஆம் புத்தகம், "நிலையியல் சொத்து தொடர்பான விருப்புறுதி ஆவணம் அல்லாத ஆவணங்களின் பதிவேடு";

2 ஆம் புத்தகம், "பதிவுசெய்ய மறுப்பதற்கான காரணங்களின் பதிவணம்";

3 ஆம் புத்தகம், "விருப்புறுதி ஆவணங்கள் மற்றும் மகவேற்புக்கான அதிகார ஆவணங்களின் பதிவேடு";

4 ஆம் புத்தகம், "பல்வகைப் பதிவேடு";

(ஆ) பதிவாளர்களின் அலுவலகங்களில்—

5 ஆம் புத்தகம், "விருப்புறுதி ஆவணங்கள் மற்றும் மகவேற்புக்கான அதிகார ஆவணங்களின் பதிவேடு".

(2) 1 ஆம் புத்தகத்தில் பிரிவுகள் 17,18 மற்றும் 89 இன்படி பதிவு செய்யப்பட்டுள்ள நிலையியல் சொத்து தொடர்புடைய விருப்புறுதி ஆவணங்கள் அல்லாத ஆவணங்கள் அல்லது பதிவுக் குறிப்புகள் அனைத்தும், பதியப்படுதல் அல்லது கோப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) 4 ஆம் புத்தகத்தில் பிரிவு 18 இன் கூறு (ஈ) மற்றும் (ஊ) இன்படி பதிவு செய்யப்பட்டுள்ள நிலையியல் சொத்துத் தொடர்பில்லாத ஆவணங்கள் அனைத்தும் பதியப்படுதல் வேண்டும்.

(4) பதிவாளரின் அலுவலகம், சார்-பதிவாளரின் அலுவலகம் ஒன்றுடன் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கிறவிடத்து, இந்தப் பிரிவிலுள்ள எதுவும், புத்தகங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட தொகுப்பினை வேண்டுறுத்துவதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

**ஆவணங்கள் முன்னிடப்படும் போது பதிவு செய்யும் அலுவலர்களின் கடமைகள்.**

52. (1) (அ) ஆவணம் முன்னிடப்படும் நேரத்தில் அத்தகைய ஆவணம் ஒவ்வொன்றின்மீதும், முன்னிடப்படும் நாள், நேரம் மற்றும் இடம் மற்றும் பதிவு செய்வதற்காக ஆவணத்தை முன்னிடுகிற ஆள் ஒவ்வொருவரின் கையொப்பம் ஆகியவை மேற்குறிப்பாக எழுதப்படுதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய ஆவணத்திற்கான வரவுச்சீட்டு ஒன்று பதிவு செய்யும் அலுவலரால் அதனை முன்னிடுகிற ஆளுக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(இ) பிரிவு 62இல் அடங்கியுள்ள வகையங்களுக்கு உட்பட்டு, பதிவுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணம் ஒவ்வொன்றும், தேவையற்ற காலந்தாழ்வின்றி அதற்கென ஒதுக்கப்பட்ட புத்தகத்தில், அது ஏற்றுக்கொள்ளப்பட்ட வரிசையின்படி பார்த்தெழுதப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய புத்தகங்கள் அனைத்தும், பதிவுத் துறை தலைவரால் அவ்வப்போது குறித்துரைக்கப்பட்ட இடைக்காலத்திலும் முறையிலும் உறுதிச்சான்றிடப்படுதல் வேண்டும்.

**பதிவுகள் தொடர்ச்சியாக எண்ணிடப்படுதல் வேண்டும்.**

53. புத்தகம் ஒவ்வொன்றிலுமுள்ள பதிவுகள் அனைத்தும் தொடர்ச்சியாக எண் இடப்படுதல் வேண்டும்; அந்த வரிசை அந்த ஆண்டுடன் தொடங்கி, அந்த ஆண்டுடன் முடியும் ஒவ்வோர் ஆண்டின் தொடக்கத்திலும் புதிய வரிசை ஒன்று தொடங்கப்படும்.

**நடப்புப் பொருளடக்க அட்டவணைகளும் அவற்றிலுள்ள பதிவுகளும்.**

54. இதில் இதற்கு முன்னர் குறிப்பிடப்பட்டுள்ள புத்தகங்கள் எவையும் வைத்து வரப்படுகிற அலுவலகம் ஒவ்வொன்றிலும், அத்தகைய புத்தகங்களின் உள்ளடக்கங்களுக்கு நடப்புப் பொருளடக்க அட்டவணைகள் தயாரிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய அட்டவணைகளிலுள்ள பதிவு ஒவ்வொன்றும், அதனுடன் தொடர்புடைய ஆவணம் பதிவு செய்யும் அலுவலரால் பார்த்தெழுதப்பட்ட பிறகு அல்லது அந்த ஆவணத்தின் விளக்கக்குறிப்புரை ஒன்று கோப்பிலிடப்பட்ட பிறகு உடனடியாக, நடைமுறையில் இயலுமளவு, செய்யப்படுதல் வேண்டும்.

**பதிவு செய்யும் அலுவலர்களால் செய்யப்பட வேண்டிய பொருளடக்க அட்டவணைகள் மற்றும் அவற்றின் உள்ளடக்கங்கள்.**

55. (1) அத்தகைய நான்கு அட்டவணைகள், அனைத்துப் பதிவு அலுவலகங்களிலும் செய்யப்படுதல் வேண்டும் மற்றும் அவை முறையே அட்டவணை எண் I, அட்டவணை எண் II, அட்டவணை எண் III மற்றும் அட்டவணை எண் IV என்று பெயரிடப்படுதல் வேண்டும்.

(2) அட்டவணை எண் I ஆனது, 1ஆம் எண் புத்தகத்தில் பதியப்பட்ட ஆவணம் அல்லது கோப்பில் சேர்க்கப்பட்ட விளக்கக் குறிப்புரை ஒவ்வொன்றின்படியும் உரிமை கோருகிற ஆட்கள் அனைவரது பெயர்கள் மற்றும் சேர்த்தல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) அட்டவணை எண் II ஆனது, இதற்கென பதிவுத் துறைத் தலைவர் அவ்வப்போது பணிக்கிறவாறான ஆவணம் மற்றும் விளக்கக் குறிப்புரை ஒவ்வொன்றின் தொடர்பாகவும், பிரிவு 21 இல் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய விவரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) அட்டவணை எண் III ஆனது, 3ஆம் எண் புத்தகத்தில் பதியப்பட்டுள்ள விருப்புறுதி ஆவணம் மற்றும் அதிகார ஆவணம் ஒன்றையும் எழுதிக் கொடுத்த ஆட்கள் அனைவரின் மற்றும் அவற்றின் முறையே அமர்த்தப்பட்ட நிறைவேற்றுநர்களின் மற்றும் ஆட்களின் பெயர்களையும், சேர்த்தல்களையும் மற்றும் விருப்புறுதி ஆவணம் எழுதிக்கொடுத்தவர் அல்லது அதிகாரம் கொடுத்தவர் இறந்த பிறகு (ஆனால் அதற்கு முன்னதாக அன்று) அவற்றின்படி உரிமை கோருகிற ஆட்கள் அனைவரின் பெயர்களையும் சேர்த்தல்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) அட்டவணை எண் IV ஆனது, எழுதிக் கொடுத்த ஆட்கள் அனைவரின் மற்றும் 4 ஆம் எண்ணுள்ள புத்தகத்தில் பதியப்பட்டுள்ள ஆவணம் ஒவ்வொன்றின்படியும் உரிமைகோருகிற ஆட்கள் அனைவரின் பெயர்களையும் சேர்த்தல்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) அட்டவணை ஒவ்வொன்றும், பதிவுத் துறைத் தலைவர் அவ்வப்போது பணிக்கிறவாறான பிற விவரங்களையும் கொண்டிருத்தல் வேண்டும், மற்றும் அத்தகைய வடிவில் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

நீக்கறவு செய்யப்பட்டது.

56. [அட்டவணை எண் I, II மற்றும் III இன் பதிவுகளின் படியானது பதிவாளருக்குச் சார்பதிவாளரால் அனுப்பப்பட்டுக் கோப்பில் சேர்க்கப்படுதல் வேண்டும். இந்தியப் பதிவு (திருத்த)ச் சட்டம், 1929 இன் பிரிவு 2 இனால் நீக்கறவு செய்யப்பட்டது.] 15/1929.

பதிவு செய்யும் அலுவலர்கள் குறித்தசில புத்தகங்களையும் பொருளடக்க அட்டவணை களையும் பார்வையிடு வதற்கு அனுமதித்தல் மற்றும் பதிவுகளின் உறுதிச் சான்றளிக்கப் பட்ட படிகளைக் கொடுத்தல்.

57. (1). 1 ஆம் மற்றும் 2 ஆம் எண் புத்தகங்கள் மற்றும் 1 ஆம் எண் புத்தகம் தொடர்புடைய பொருளடக்க அட்டவணைகளைப் பார்வையிட விண்ணப்பிக்கிறவர் எவருக்கும், இதற்கெனச் செலுத்தப்படும் கட்டணங்களின் முந்தைய செலுத்தத்திற்கு உட்பட்டு, அனைத்து நேரங்களிலும் அவற்றைப் பார்வையிடுவதற்கு அனுமதி உண்டு, மற்றும் பிரிவு 62 இன் வகையங்களுக்கு உட்பட்டு, அத்தகைய படிகளுக்காக விண்ணப்பிக்கிற ஆட்கள் அனைவருக்கும் அத்தகைய புத்தகங்களிலுள்ள பதிவுகளின் படிகள் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(2) அதே வகையங்களுக்கு உட்பட்டு, 3 ஆம் எண் புத்தகத்திலுள்ள மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருளடக்க அட்டவணையிலுள்ள பதிவுகளின் படிகள், அத்தகைய பதிவுகள் தொடர்புடைய ஆவணங்களை எழுதிக் கொடுத்த ஆட்களுக்கு அல்லது அவர்களின் முகவர்களுக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும் மற்றும் எழுதிக் கொடுத்தவர்கள் இறந்த பின்னர் (ஆனால் அதற்கு முன்னதாக அன்று) அத்தகைய படிகளுக்காக விண்ணப்பிக்கிற ஆள் எவருக்கும் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(3) அந்த வகையங்களுக்கு உட்பட்டு, 4ஆம் எண் புத்தகத்திலுள்ள மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருளடக்க அட்டவணையிலுள்ள பதிவுகளின் படிகள், அத்தகைய பதிவுகள் முறையே குறிக்கிற ஆவணங்களை எழுதிக்கொடுத்த ஆட்களுக்கு அல்லது அதன்படி உரிமைகோருகிற ஆட்களுக்கு அல்லது அவருடைய முகவருக்கு அல்லது சார்பற்றுநருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(4) 3ஆம் எண் மற்றும் 4ஆம் எண் புத்தகங்களிலுள்ள பதிவுகளுக்காக, இந்தப் பிரிவின்படி தேவைப்படும் தேடுதலானது, பதிவு செய்யும் அலுவலரால் மட்டுமே செய்யப்படுதல் வேண்டும்.

(5) இந்தப் பிரிவின்படி கொடுக்கப்பட்ட அனைத்துப் படிகளும், பதிவு செய்யும் அலுவலரால் கையொப்பமிடப்பட்டு இலச்சினையிடப்படுதல் வேண்டும் மற்றும் மூல ஆவணங்களின் உள்ளடக்கத்தை மெய்ப்பிக்கும் பொருட்டு ஏற்றுக் கொள்ளப்படத்தக்கனவாகும்.

**(ஆ) பதிவு செய்ய ஏற்றுக்கொள்வதன் பேரிலான நடைமுறை பற்றியன.**

பதிவுசெய்வதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆவணங்களின் மீது மேற்குறிப்பாக எழுதப்பட வேண்டிய விவரங்கள்.

58.(1) தீர்ப்பாணை அல்லது ஆணையுரை ஒன்றின்படி அல்லது பிரிவு 89 இன்படி பதிவு செய்யும் அலுவலர் ஒருவருக்கு அனுப்பப்பட்ட படி அல்லாத பிற ஆவணம் ஒவ்வொன்றும் பதிவு செய்வதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டதன்பேரில், அதன்மீது பின்வரும் விவரங்கள் அவ்வப்போது மேற்குறிப்பாக எழுதப்படுதல் வேண்டும், அதாவது—

(அ) ஆவணம் எழுதிக்கொடுத்ததை ஒப்புக்கொள்கிற ஆள் ஒருவரின் கையொப்பமும் சேர்த்தலும் மற்றும் அத்தகைய எழுதிக்கொடுக்கப்பட்டதானது ஆள் எவரின் சார்பாற்றுநரால், உரிமை அளிக்கப் பெற்றவரால் அல்லது முகவரால் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பின், அத்தகைய சார்பாற்றுநரின், உரிமையளிக்கப்பெற்றவரின் அல்லது முகவரின் கையொப்பமும், சேர்த்தலும்;

(ஆ) இந்தச் சட்டத்தின் வகையங்கள் எவற்றின் படியும் அத்தகைய ஆவணத்தைக் குறித்து விசாரணை செய்யப்பட்ட ஆள் ஒவ்வொருவரின் கையொப்பமும், சேர்த்தலும்; மற்றும்

(இ) ஆவணம் எழுதிக்கொடுத்ததைக் குறித்துப் பதிவு செய்யும் அலுவலரின் முன்னிலையில் செலுத்தப்பட்ட பணம் அல்லது ஒப்படைக்கப்பட்ட சரக்குகள் எவையும் மற்றும் அவ்வாறு எழுதிக் கொடுத்ததைக்குறித்து மறுபயனை முழுவதுமாகவோ பகுதியாகவோ பெற்றுக்கொண்டதற்குச் செய்த ஏற்புரை எதுவும்.

(2) ஆவணம் ஒன்றை எழுதிக்கொடுத்ததை ஒத்துக்கொள்கிற ஆள் எவரும் அதற்கான மேற்குறிப்பினை எழுதுவதற்கு மறுத்துவிடுகிறபோதிலும், பதிவு செய்யும் அலுவலர் அதனைப் பதிவு செய்தல் வேண்டும்; ஆனால் அதே நேரத்தில் அத்தகைய மறுப்பைப் பற்றிய குறிப்பொன்றினை எழுதுதல் வேண்டும்.

மேற்குறிப்புகள் பதிவு செய்யும் அலுவலரால் தேதியிடப்பட்டு கையொப்பம் இடப்படுதல் வேண்டும்.

59. பதிவு செய்யும் அலுவலர் ஓர் ஆவணம் தொடர்பான, பிரிவுகள் 52 இன் மற்றும் 58இன்படி செய்யப்பட்டவைகளையும் அதே நாளில் அவர் முன்னிலையில் செய்யப்பட்டவையுமான மேற்குறிப்புகள் அனைத்திற்கும், தேதியையும் தம்முடைய கையொப்பத்தையும் இடுதல் வேண்டும்.

பதிவு செய்யப்பட்டதற்கான உறுதிச்சான்று.

60.(1) பிரிவுகள் 34,35,58 மற்றும் 59இல் பதிவு செய்வதற்காக முன்னிடப்பட்ட ஆவணம் எதற்கும், எந்தப் பிரிவுகள் பொருந்துகின்றனவோ அந்தப் பிரிவுகளின் வகையங்கள் நிறைவேற்றப்பட்டதன் பின்னர், பதிவு செய்யும் அலுவலர், அந்த ஆவணத்தின் மீது "பதிவு செய்யப்பட்டது" என்ற சொல்லைக் கொண்ட உறுதிச்சான்று ஒன்றினை, எந்தப் புத்தகத்தில் அந்த ஆவணம் பார்த்தெழுதப்பட்டதோ அந்தப் புத்தகத்தின் எண் மற்றும் பக்கத்துடன் சேர்த்து, மேற்குறிப்பை எழுதுதல் வேண்டும்.

(2) அத்தகைய உறுதிச்சான்று பதிவு செய்யும் அலுவலரால் கையொப்பமிடப்பட்டு இலச்சினையிடப்பட்டுத் தேதியிடப்படுதல் வேண்டும், மற்றும் அதன் பின்னர் அந்த ஆவணமானது, இந்தச் சட்டத்தினால் வகைசெய்யப்பட்ட முறையில் உரியவாறு பதிவுசெய்யப்பட்டிருக்கிறது என்றும், பிரிவு 59 இல் குறிப்பிடப்பட்ட மேற்குறிப்புகளில் குறிப்பிடப்பட்ட பொருண்மைகள் அதில் குறிப்பிடப்பட்டவாறு நிகழ்ந்துள்ளன என்றும், மெய்ப்பித்தல் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாகும்.

மேற் குறிப்புகளையும் உறுதிச் சான்றினையும் பார்த்தெழுதிக் கொண்டு ஆவணம் திருப்பி கொடுக்கப்படுதல் வேண்டும்.

61(1) பிரிவுகள் 59 மற்றும் 60இல் குறிக்கப்பட்ட மற்றும் குறிப்பிடப்பட்ட மேற்குறிப்புகளும் உறுதிச்சான்றும், அதன் பின்னர் பதிவுப் புத்தகத்தின் பக்க ஓரத்தில் பார்த்தெழுதப்படுதல் வேண்டும், மற்றும் பிரிவு 21 இல் குறிப்பிடப்பட்ட புவிப்படத்தின் அல்லது அமைப்புப் படத்தின்படி (ஏதேனுமிருப்பின்) அது 1ஆம் எண் புத்தகக் கோப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) அதன் பேரில், ஆவணத்தின் பதிவு முழுமையடைந்ததாகக் கொள்ளப்படுதல் வேண்டும், மேலும் அந்த ஆவணமானது அதனைப் பதிவு செய்வதற்காக முன்னிட்ட ஆளிடம் அல்லது ஆவணத்தைத் திருப்பித் தரும்பொருட்டு, பிரிவு 52இல் குறிப்பிடப்பட்ட வரவுச்சீட்டின்மீது அவர் எழுத்து வடிவில் நியமனம் செய்யப்பட்டுள்ளவாறான பிற ஆள் (எவரேனும் இருப்பினும்) அவரிடம் திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

பதிவு*செய்யும் அலுவலருக்குத் தெரியாத மொழியிலுள்ள ஆவணத்தை முன்னிடுவதன் பேரில் நடைமுறை.

62.(1) பிரிவு 19இன்படி ஆவணம் ஒன்று பதிவிற்காக முன்னிடப்படும்போது, அந்த ஆவணத்தின் வகையைச் சேர்ந்த ஒத்த ஆவணங்களுக்குரிய பதிவேட்டில் அந்த மொழிபெயர்ப்புப் பார்த்தெழுதப்படுதல் வேண்டும். மேலும் பிரிவு 19இல் குறிக்கப்பட்ட படியுடன் சேர்த்து பதிவு செய்யும் அலுவலகத்தில் கோப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) பிரிவுகள் 59 மற்றும் 60இல் முறையே குறிப்பிடப்பட்ட மேற்குறிப்புகளும், உறுதிச்சான்றும் மூல ஆவணத்தின்மீது எழுதப்படுதல் வேண்டும். பிரிவுகள் 57, 64, 65 மற்றும் 66களினால் வேண்டுறுத்தப்பட்ட படிகளையும் விளக்கக் குறிப்புரைகளையும் எழுதுவதற்காக அந்த மொழிபெயர்ப்பானது முதற்கண்ணிருந்த மூல ஆவணமாக இருந்தாற்போன்று கொள்ளப்படுதல் வேண்டும்.

ஆணைமொழிகள் செய்து வைப்பதற்கு மற்றும் விவர அறிக்கையின் சாரத்தைப் பதிவுசெய்தல்.

63. (1) பதிவு செய்யும் அலுவலர் ஒவ்வொருவரும், இந்தச் சட்டத்தின் வகையங்களின்படி அவரால் விசாரிக்கப்படுகிற ஆள் எவருக்கும், தம் உளத்தேர்வின்படி ஆணைமொழி செய்து வைக்கலாம்.

(2) அத்துடன் அத்தகைய அலுவலர் ஒவ்வொருவரும், அத்தகைய ஆள் ஒவ்வொருவராலும் செய்யப்பட்ட விவர உரையின் சாரத்தின் குறிப்பினைத் தம் உளத்தேர்வின்படி பதிவு செய்யலாம்; மற்றும் அத்தகைய விவரஉரை படித்துக் காட்டப்படுதல் வேண்டும் அல்லது (அத்தகைய ஆளுக்குப் பழக்கமில்லாத ஒரு மொழியில் ஆக்கப் பட்டிருந்தால்) அவருக்குப் பழக்கமான மொழியொன்றில் மொழிபெயர்த்து உறைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய குறிப்புச் சரியானதென்று அவர் ஏற்றுக் கொள்வாராயின், அது பதிவு செய்யும் அலுவலரால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

(3) அவ்வாறு கையொப்பமிடப்பட்ட அத்தகைய குறிப்பு ஒவ்வொன்றும் அதில் செய்யப்பட்ட விவரவுரைகள் அதில் சொல்லப்பட்டுள்ள ஆட்களினால் மற்றும் சூழ்நிலைகளின்படி செய்யப்பட்டிருக்கின்றன என்று மெய்ப்பிப்பதன் நோக்கத்திற்காக ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதாகும்.

## (இ) சார்—பதிவாளரின் தனியுறு கடமைகள்

ஆவணம் பல்வேறு உள மாவட்டங் களிலுள்ள நிலம் தொடர்பாக இருக்குமிடத்து நடைமுறை.

64. சார்-பதிவாளர் ஒவ்வொருவரும் தமக்குரிய உள்மாவட்டத்தில் முழுவதுமாக அமைந்திராத நிலையியல் சொத்துத் தொடர்பான விருப்புறுதி ஆவணம் அல்லாத ஆவணம் ஒன்றைப் பதிவு செய்ததன்பேரில், அதைப்பற்றியதும் மற்றும் அதன் மீதுள்ள மேற்குறிப்பு மற்றும் உறுதிச்சான்று (ஏதேனுமிருப்பின்) அதனைப் பற்றியதுமான விளக்கக் குறிப்புரை ஒன்றைச் செய்தல் வேண்டும்; மற்றும், அவர் எந்தப் பதிவாளருக்குக் கீழமைந்துள்ளரோ அதே பதிவாளருக்குக் கீழமைந்த பிற சார்-பதிவாளர் எவருடைய உள்மாவட்டத்தில் அத்தகைய சொத்தின் பகுதி எதுவும் அமைந்திருக்கிறதோ அந்தச் சார்-பதிவாளர் ஒவ்வொருவருக்கும் அதனை அனுப்பிவைத்தல் வேண்டும், மற்றும் அத்தகைய சார்-பதிவாளர், அந்த விளக்கக் குறிப்புரையினைத் தம்முடைய 1 ஆம் எண் புத்தகக் கோப்பிலிட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

65. (1) சார்பதிவாளர் ஒவ்வொருவரும், ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களில் அமைந்திருக்கும் நிலையியல் சொத்து தொடர்பான விருப்புறுதி ஆவணம் அல்லாத ஆவணம் ஒன்றைப் பதிவு செய்ததன்பேரில், தமக்குரிய உள்மாவட்டம் அமைந்துள்ள மாவட்டம் அல்லாத பிற எந்த மாவட்டத்தில் சொத்தின் பகுதி எதுவும் அமைந்திருக்கிறதோ, அந்த மாவட்டம் ஒவ்வொன்றின் பதிவாளருக்கும் அதன் படி ஒன்றையும் அதன் மீதான மேற்குறிப்பு மற்றும் உறுதிச்சான்று (ஏதேனுமிருப்பின்) அதன் படி ஒன்றையும், பிரிவு 21இல் குறிப்பிடப்பட்ட புவிப்படம் அல்லது அமைப்புப்படம் (ஏதேனுமிருப்பின்) அதன் படியுடன் சேர்த்து அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஆவணம் பல்வேறு மாவட்டங் களிலுள்ள நிலம் தொடர்பாக இருக்குமிடத்து நடைமுறை.

(2) பதிவாளர் அவற்றைப் பெற்றுக்கொண்டதன்பேரில், ஆவணத்தின்படியையும் புவிப்படம் அல்லது அமைப்புப்படம் (ஏதேனுமிருப்பின்) அதன் படியையும் தமது 1ஆம் எண் புத்தகக் கோப்பிலிட்டுக் கொள்ளுதல் வேண்டும் மற்றும் தமக்குக் கீழமைந்த சார்-பதிவாளர்களில் எவருடைய உள்மாவட்டத்தில் அத்தகைய சொத்தின் பகுதி எதுவும் அமைந்துள்ளதோ, அந்தச் சார்-பதிவாளர்கள் ஒவ்வொருவருக்கும் ஆவணத்தின் விளக்கக் குறிப்புரை ஒன்றை அனுப்பி வைத்தல் வேண்டும். மற்றும் அத்தகைய விளக்கக் குறிப்புரையைப் பெறுகிற சார்-பதிவாளர் ஒவ்வொருவரும், அதனைத் தமது 1ஆம் எண் புத்தகக் கோப்பிலிட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

## (ஈ) பதிவாளர்களின் தனியுறு கடமைகள்

66.(1). நிலையியல் சொத்துத் தொடர்பான விருப்புறுதி ஆவணம் அல்லாத ஆவணம் எதனையும் பதிவு செய்ததன்பேரில் பதிவாளர் தமக்குக் கீழமைந்த சார்-பதிவாளர்களில் எவருடைய உள்மாவட்டத்தில் அந்தச் சொத்தின் பகுதி எதுவும் அமைந்துள்ளதோ அந்தச் சார்-பதிவாளர் ஒவ்வொருவருக்கும், அத்தகைய ஆவணத்தின் விளக்கக் குறிப்புரை ஒன்றினை அனுப்பி வைத்தல் வேண்டும்.

நிலம் தொடர்பான ஆவணங்களைப் பதிவு செய்ததன் பின் நடைமுறை.

(2) பதிவாளர் அத்தகைய ஆவணத்தின் படியுடன் பிரிவு 21இல் குறிப்பிடப்பட்ட புவிப்படம் அல்லது அமைப்புப்படம் (ஏதேனுமிருப்பின்) அதன் படி ஒன்றையும் சேர்த்து, பிற பதிவாளர் எவரொருவருடைய மாவட்டத்தில் அத்தகைய சொத்தின் பகுதி எதுவும் அமைந்துள்ளதோ அந்தப் பதிவாளர் ஒவ்வொருவருக்கும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(3) அத்தகைய பதிவாளர் அத்தகைய படி எதனையும் பெறுவதன்பேரில், அதைத் தமது 1ஆம் எண் புத்தகக் கோப்பிலிட்டுக் கொள்ளுதல் வேண்டும், மற்றும் தமக்குக் கீழமைந்த சார்-பதிவாளர்களில் எவரொருவருடைய உள் மாவட்டத்தில் அந்தச் சொத்தின் பகுதி எதுவும் அமைந்துள்ளதோ அந்தச் சார்-பதிவாளர் ஒவ்வொருவருக்கும் அந்தப் படியின் விளக்கக் குறிப்புரையை அனுப்பி வைத்தல் வேண்டும்.

(4) இந்தப் பிரிவின்படியான விளக்கக் குறிப்பு எதனையும் பெறுகிற சார்பதிவாளர் ஒவ்வொருவரும், அதனைக் தமது 1 ஆம் எண் புத்தகக் கோப்பிலிட்டுக்கொள்ளுதல் வேண்டும்.

67. பிரிவு 30இன் உட்பிரிவு (2)இன்படி ஆவணம் எதுவும் பதிவு செய்யப்படுவதன் பேரில், அத்தகைய ஆவணத்தின் படியை மற்றும் அதன் மீதான மேற்குறிப்புகளையும் உறுதிச்சான்றினையும் பதிவாளர் எவரொருவருடைய மாவட்டத்தில் அந்த முறையாவணம் தொடர்பான சொத்தின் பகுதி எதுவும் அமைந்துள்ளதோ, அந்தப் பதிவாளர் ஒவ்வொருவருக்கும் அனுப்பிவைத்தல் வேண்டும், மற்றும் அத்தகைய படியைப் பெறுகிற பதிவாளர் பிரிவு 66இன் உட்பிரிவு (1)இல் அவருக்காக வகுத்துரைக்கப்பட்ட நடைமுறையைப் பின்பற்றுதல் வேண்டும்.

பிரிவு 30இன் உட்பிரிவு(2)இன் படி பதிவு செய்யப்பட்ட பின்னர் நடைமுறை.

## (உ) பதிவாளர்கள் மற்றும் பதிவுத்துறைத் தலைவரின் ஆளுகை அதிகாரங்கள்

68.(1) சார்-பதிவாளர் ஒவ்வொருவரும், எந்தப் பதிவாளரின் மாவட்டத்தில் அந்தச் சார்-பதிவாளரின் அலுவலகம் அமைந்துள்ளதோ அந்தப் பதிவாளரின் கண்காணிப்பு மற்றும் ஆளுகையின்கீழ் தம் பதவிக் கடமைகளைப் புரிதல் வேண்டும்.

பதிவாளர்களுக்குச் சார்-பதிவாளர் களைக் கண் காணிக்கவும் ஆளுகை செய்யவுமுள்ள அதிகாரம்.

(2) பதிவாளர் ஒவ்வொருவரும், தமக்குக் கீழமைந்த சார்-பதிவாளர் எவரின் செய்கை அல்லது விடுகை எதனையும் பொறுத்து, அல்லது ஆவணம் எதுவும் பதிவு செய்யப்பட்டுள்ள புத்தகம் அல்லது அலுவலகத்தைப் பற்றிய பிழை எதனையும் திருத்தியமைத்தலைப் பொறுத்து, தாம் தேவையெனக் கருதுகிற இந்தச் சட்டத்திற்கு ஒவ்வுதலாகவுள்ள ஆணை எதனையும் (முறைகேட்டின் பேரிலோ அல்லது பிறவாறாவோ) பிறப்பிக்க அதிகாரம் உடையவராவார்.

பதிவுத்துறைத் தலைவருக்குப் பதிவு செய்யும் அலுவலர்களைக் கண்காணிப் பதற்கும் விதிகள் வகுப் பதற்குமுள்ள அதிகாரம்.

69. (1) பதிவுத்துறைத் தலைவர், மாநில அரசாங்கத்தின் கீழுள்ள ஆட்சி நிலவரைக்குள் இருக்கும் பதிவுசெய்யும் அலுவலகங்கள் எல்லாவற்றின்மீதும் பொதுவாகக் கண்காணிப்புச் செய்தல் வேண்டும். மற்றும் இந்தச் சட்டத்திற்கு ஒவ்வுதலாகவுள்ள—

(அ) புத்தகங்கள்,வரைதாள்கள் மற்றும் ஆவணங்களின் பத்திரமான பாதுகாப்பிற்கு வகைசெய்கிற,

(ஆ) மாவட்டம் ஒவ்வொன்றிலும் பொதுவாக எந்த மொழிகள் பயன்படுத்தப்படுவனவாகக் கொள்ளப்படுதல் வேண்டும் என்று விளம்புகிற,

(இ) பிரிவு 21இன்படி ஏற்பளிக்கப்படவேண்டிய ஆட்சி நிலவரைகளின் பிரிவுகள் எவை என்று விளம்புகிற,

(ஈ) பிரிவுகள் முறையே 25 மற்றும் 34 இன்படி விதிக்கப்படும் பணத்தண்டத் தொகைகளை ஒழுங்குறுத்துகிற,

(உ) பதிவுசெய்யும் அலுவலரிடம் பிரிவு 63இல் அவரது உளத்தேர்வின்படி அவர் செலுத்தும்படி விடப்பட்டவற்றை ஒழுங்குறுத்துகிற,

(ஊ) பதிவுசெய்யும் அலுவலர்களின் ஆவணங்களைப்பற்றி எழுதப்பட வேண்டிய விளக்கக் குறிப்புரைகள் இருக்க வேண்டிய படிவத்தை ஒழுங்குறுத்துகிற,

(எ) பிரிவு 51இன்படி பதிவாளர்கள் மற்றும் சார்-பதிவாளர்களால் முறையே அவர்களுடைய அலுவகங்களில் வைக்கப்பட்டுள்ள புத்தகங்களில் உறுதிச்சான்றிடப்படுவதை ஒழுங்குறுத்துகிற,

(எஎ) பிரிவு 88இன் உட்பிரிவு (2)இல் குறிக்கப்பட்ட முறையாவணங்கள் பதிவுசெய்வதற்காக முன்னிடப்படும் முறையை ஒழுங்குறுத்துகிற,

(ஏ) அட்டவணை எண்கள் முறையே I, II, III மற்றும் IVஇல் அடங்கியிருக்க வேண்டிய விவரங்களை விளம்புகிற,

(ஐ) பதிவுசெய்யும் அலுவலகங்களில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிமுறைகளை விளம்புகிற, மற்றும்

(ஒ) பொதுவாக, பதிவாளர்கள் மற்றும் சார்—பதிவாளர்களின் அலுவலக நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துகிற,

விதிகளை அவ்வப்போது வகுப்பதற்கு அதிகாரம் உடையவராவார்.

(2) விதிகள் அவ்வாறு வகுக்கப்பட்டு ஒப்புதலளிப்பிற்காக மாநில அரசாங்கத்திற்கு பணிந்தனுப்பப்படுதல் வேண்டும், மற்றும் அவை ஒப்பேற்பளிக்கப்பட்ட பின்பு, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும். மற்றும் வெளியிடப்பட்டதன் பேரில் இந்த சட்டத்தின்படி இயற்றப்பட்டிருந்தாற்போன்றே அவை செல்திறம் பெறும்.

பதிவுத்துறைத் தலைவருக்குப் பணத் தண்டங்களைக் குறைப்பதற்குள்ள அதிகாரம்.

70. பதிவுத் துறைத் தலைவர் பிரிவு 25 அல்லது பிரிவு 34இன்படி விதிக்கப்பட்ட பணத்தண்டம் எதற்கும் உரிய பதிவு கட்டணத் தொகைக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை முழுவதுமாக அல்லது பகுதியாக, தம் உளத்தேர்வின்படி குறைக்கலாம்.

## பகுதி XII

## பதிவு செய்ய மறுத்தல்

71.(1) ஆவணம் ஒன்றை பதிவு செய்ய மறுக்கும் சார்-பதிவாளர் ஒவ்வொருவரும், அது தொடர்பான சொத்து தம்முடைய உள்-மாவட்டத்தில் அமைந்திருக்கவில்லை என்ற காரணத்தின்பேரில் தவிர, மறுப்பதற்கான ஆணை ஒன்றைச் செய்தல் வேண்டும், மற்றும் அத்தகைய ஆணைக்கான தம்முடைய காரணங்களைத் தம்முடைய 2ஆம் எண் புத்தகத்தில் குறித்துவைத்தல் வேண்டும். மற்றும் "பதிவு செய்தல் மறுக்கப்பட்டது" என்னும் சொற்களை அந்த ஆவணத்தின்மீது மேற்குறிப்பாக எழுதுதல்வேண்டும். மற்றும் அவ்வாறு குறித்துவைக்கப்பட்ட காரணங்களின் படி ஒன்றை, அந்த ஆவணத்தை எழுதிக் கொடுக்கிற அல்லது அதன்படி உரிமை கோருகிற ஆள் எவராலும் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்பேரில் பணச்செலுத்தமின்றியும், தேவையற்ற காலத்தாழ்வின்றியும் அவருக்குக் கொடுத்தல் வேண்டும்.

பதிவு செய்ய மறுத்தலுக்கான காரணங்கள் குறித்து வைக்கப் படுதல்வேண்டும்.

(2) பதிவு செய்யும் அலுவலர் எவரும், அவ்வாறு மேற்குறிப்பெழுதப்பட்ட ஆவணம் ஒன்றை இதில் இதற்குப் பின்னர் அடங்கியுள்ள வகையங்களின்படி அந்த ஆவணம் பதிவு செய்யப்படுவதற்கு வேண்டுறுத்தப்பட்டாலன்றியும், வேண்றுத்தப்படும் வரையிலும் பதிவு செய்வதற்காக ஏற்றுக்கொள்ளுதல் ஆகாது.

72.(1) எழுதிக் கொடுத்தது மறுதலிக்கப்பட்டது என்னும் காரணத்தின் பேரில், அவ்வாறு மறுக்கப்படுமிடத்து தவிர, ஆவணம் ஒன்றைப் பதிவு செய்வதற்கு (அத்தகைய ஆவணத்தைப் பதிவு செய்தல் கட்டாயமானதாக இருந்தாலும் அல்லது தெரிவுரிமையுடையதாக இருந்தாலும்) ஏற்கமறுக்கிற சார்-பதிவாளர் ஒருவரின் ஆணை ஒன்றுக்கு எதிராக, அந்த ஆணை இடப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், அந்தச் சார்-பதிவாளர் எந்தப்பதிவாளருக்குக் கீழமைந்தவராக இருக்கிறாரோ அந்தப் பதிவாளரிடம் மேல்முறையீடு செய்வதற்கு உற்றது ஆகும் மற்றும் அந்தப் பதிவாளர் அத்தகைய ஆணையை எதிர்மாறாக்கலாம் அல்லது மாற்றம் செய்யலாம்.

பதிவாளருக்கு எழுதிக் கொடுத்தது மறுதலிக்கப் பட்டது என்ற காரணம் அல்லாத பிற காரணத்தின் பேரில் பதிவு செய்வதற்கு மறுக்கிற சார்-பதிவாளர்களின் ஆணைகளின் மீது மேல்முறையீடு.

(2) அந்த ஆவணம் பதிவு செய்யப்படவேண்டுமென்று பதிவாளரின் ஆணை பணிக்குமிடத்து, அத்தகைய ஆணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், சார்-பதிவாளர், அந்த ஆணைக்குக் கீழ்ப்படிதல் வேண்டும், மற்றும் அதன்பேரில், இயலுமளவில், பிரிவுகள் 58,59 மற்றும் 60இல் வகுத்துரைக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். மற்றும் அவ்வாறு செய்யப்பட்ட பதிவானது, ஆவணம் முதலில் உரியவாறு முன்னிடப்பட்டபோது பதிவுசெய்யப்பட்டிருந்தாற்போன்று செல்திறம் பெறும்.

73. (1) ஆவணம் ஒன்று எந்த ஆளால் எழுதிக் கொடுக்கப்பட்டிருப்பதாகப் புலப்படுகிறதோ அந்த ஆள் எவரும் அல்லது அவருடைய சார்பாற்றுநர் அல்லது உரிமையளிக்கப்பெற்றவர் அது எழுதிக்கொடுக்கப்பட்டதை மறுதலிக்கிறார் என்ற காரணத்தின்பேரில், அதனைப் பதிவுசெய்ய சார்-பதிவாளர் ஒருவர் மறுத்துவிடும்போது, அத்தகைய ஆவணத்தின்படி உரிமை கோருகிற ஆள் எவரும் அல்லது அவருடைய சார்பாற்றுநர் அல்லது உரிமையளிக்கப்பெற்றவர் அல்லது மேற்கூறப்பட்டவாறு அதிகாரமளிக்கப்பட்ட முகவர், மறுப்பதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்ட பின்னர் முப்பது நாட்களுக்குள், அத்தகைய சார்-பதிவாளர் எந்தப் பதிவாளருக்குக் கீழமைந்துள்ளாரோ அவருக்கு அந்த ஆவணத்தைப் பதிவு செய்துகொள்வதற்குத் தமக்குள்ள உரிமையை நிலைநாட்டும் பொருட்டு விண்ணப்பிக்கலாம்.

பதிவாளருக்கு எழுதிக் கொடுத்தது மறுதலிக்கப்பட்ட காரணத்தின் பேரில் சார்-பதிவாளர் பதிவு செய்ய மறுக்குமிடத்து விண்ணப்பம்.

(2) அத்தகைய விண்ணப்பமானது, எழுத்துவடிவில் இருத்தல் வேண்டும், மற்றும் பிரிவு 71இன்படி குறித்துவைக்கப்பட்ட காரணங்களின் படியொன்றும் உடன் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மற்றும் அந்த விண்ணப்பத்தின் விவரவுரைகள் வாதுரைகளை உண்மையென உறுதிசெய்தலுக்கு சட்டத்தினால் வேண்டுறுத்தப்பட்டுள்ள முறையில், விண்ணப்பதாரரால், உண்மையென உறுதி செய்யப்படுதல் வேண்டும்.

அத்தகைய விண்ணப்பம் செய்யப்படுவதன் பேரில் பதிவாளரின் நடைமுறை.

74. அத்தகைய நேர்விலும், பதிவாளர் ஒருவரின் முன்பு பதிவு செய்வதற்காக அவரிடம் முன்னிடப்பட்ட ஆவணம் ஒன்றைப் பொறுத்து, மேற்சொன்னவாறான அத்தகைய மறுதலிப்புச் செய்யப்பட்டிருக்குமிடத்துங்கூட, பதிவாளர், வசதிக்கேற்ப, கூடியவிரைவில்—

(அ) அந்த ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று,

(ஆ) விண்ணப்பதாரைப் பொறுத்தவரை அல்லது, நேர்வுக்கேற்ப, பதிவு செய்வதற்காக ஆவணத்தை முன்னிடுகிற ஆளைப் பொறுத்தவரை, அந்த ஆவணத்தைப் பதிவு செய்வதற்கு உரியதாகச் செய்வதற்கு அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டத்தின் வேண்டுறுத்தங்கள் நிறைவேற்றப்பட்டனவா என்று,

விசாரணை செய்தல் வேண்டும்.

பதிவுசெய்யும் அலுவலரால் இடப்பட்ட ஆணையும் அதன்மீதான நடைமுறையும்.

75. (1) ஆவணங்கள் எழுதிக் கொடுக்கப்பட்டிருப்பதாக மற்றும் சொல்லப்பட்ட அந்த வேண்டுறுத்தங்கள் நிறைவேற்றப்பட்டிருப்பதாகப் பதிவாளர் முடிவுக்கு வருவாராயின், அவர் அந்த ஆவணம் பதிவுசெய்யப்படவேண்டுமென்று ஆணையிடுதல் வேண்டும்.

(2) அந்த ஆணையிடப்பட்ட பின்னர் முப்பது நாட்களுக்குள் அந்த ஆவணம் பதிவு செய்யப்படுவதற்கு உரியவாறு முன்னிடப்படுமாயின், பதிவு செய்யும் அலுவலர் ஆணைக்குக் கீழ்ப்படிதல் வேண்டும். மற்றும் அதன்பேரில், இயலுமளவுக்கு, பிரிவுகள் 58,59 மற்றும் 60 இல் வகுத்துரைக்கப்பட்ட நடைமுறையினைப் பின்பற்றுதல் வேண்டும்.

(3) அத்தகைய பதிவானது, அந்த ஆவணம் பதிவு செய்யப்படுவதற்காக முதலில் உரியவாறு முன்னிடப்பட்டபோது பதிவு செய்யப்பட்டிருந்தாற்போன்று செல்திறம் பெறுதல் வேண்டும்.

(4) பதிவாளர், பிரிவு 74 இன்படியான விசாரணை எதற்குமான நோக்கத்திற்காக மற்றும் சான்றளிப்பவர்கள் வருகை தருவதை அழைப்பாணையிட்டுக் கட்டாயப்படுத்தலாம், மற்றும் உரிமையியல் நீதிமன்றமாக இருந்தாற்போன்று அவர்களைச் சான்றளிக்கக் கட்டாயப்படுத்தலாம், மேலும், அவர் அத்தகைய விசாரணை எதற்குமான செலவுத் தொகை முழுவதும் அல்லது அதன் பகுதி எதுவும் எவரால் செலுத்தப்படவேண்டும் என்று பணிக்கலாம், மற்றும் அத்தகையச் செலவுத் தொகையானது, உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1908 இன்படி உரிமை வழக்கு ஒன்றில் 5/1908
அளிக்கப்பட்டிருந்தாற்போன்று வசூலிக்கப்படுதல் வேண்டும்.

பதிவாளரின் மறுத்துவிடுகிற ஆணை.

76.(1).(அ) ஆவணம் ஒன்றை, அது தொடர்பான சொத்தானது தமது மாவட்டத்திற்குள் அமைந்திருக்கவில்லை என்கிற அல்லது ஆவணமானது அந்த சார்-பதிவாளர் ஒருவரின் அலுவலகத்தில் பதிவு செய்யப்படுதல் வேண்டும் என்கிற காரணத்தின்பேரில் தவிர, பதிவுசெய்ய, அல்லது

(ஆ) பிரிவு 72 அல்லது 75 இன்படி ஆவணம் ஒன்றைப் பதிவு செய்வதற்குப் பணிக்க,

மறுத்துவிடுகிற பதிவாளர் ஒவ்வொருவரும் மறுத்துவிடுகிற ஆணை ஒன்றினைப் பிறப்பித்தல் வேண்டும், மற்றும், அத்தகைய ஆணைக்கான காரணங்களை அவரது 2ஆம் எண் புத்தகத்தில் குறித்துவைத்தல் வேண்டும், மற்றும் அந்த ஆவணத்தை எழுதிக் கொடுக்கிற அல்லது அதன்படி உரிமைகோருகிற ஆள் எவராலும் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்பேரில், தேவையற்றக் காலத்தாழ்வின்றி, அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட காரணங்களின் படியொன்றினை அவருக்குக் கொடுத்தல் வேண்டும்.

(2) இந்தப் பிரிவின்படி அல்லது பிரிவு 72 இன்படி பதிவாளர் ஒருவரால் பிறப்பிக்கப்பட்ட ஆணை எதுவும் மேல்முறையீடு செய்வதற்கு உற்றதாகாது.

77.(1) பதிவாளர் பிரிவு 72 அல்லது பிரிவு 76இன்படி ஆவணத்தைப் பதிவு செய்வதற்கு ஆணை பிறப்பிக்க மறுத்துவிடுகிறவிடத்து, அத்தகைய ஆவணத்தின்படி உரிமைகோருகிற ஆள் எவரும் அல்லது அவருடைய சார்பாற்றுநர், உரிமையளிக்கப்பெற்றவர் அல்லது முகவர், மறுத்துவிடுகிற அந்த ஆணை பிறப்பிக்கப்பட்ட முப்பது நாட்களுக்குள், அந்த ஆவணத்தைப் பதிவுசெய்ய நாடப்பட்ட அலுவலகமானது, எந்த உரிமையியல் நீதிமன்றத்தின் முதலேற்பு அதிகாரவரம்பின் எல்லைகளுக்குள் அமைந்திருக்கிறதோ அந்த உரிமையியல் நீதிமன்றத்தால், ஓர் உரிமை வழக்கை, அதில் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட பின்னர் முப்பது நாட்களுக்குள் அந்த அலுவலகத்தில் பதிவு செய்யப்படுவதற்காக உரியவாறு அது முன்னிடப்படுமாயின், அத்தகைய அலுவலகத்தில் அதனைப் பதிவு செய்வதற்குப் பணிக்கிற தீர்ப்பாணை ஒன்றினைக் கோரி, தொடுக்கலாம். பதிவாளரின் மறுத்துவிடுகிற ஆணைக்கான நேர்வில் உரிமை வழக்கு.

(2) பிரிவு 75இன் உட்பிரிவுகள் (2) மற்றும (3)இல் அடங்கியுள்ள வகையங்கள், தேவையான மாறுதல்களுடன், அத்தகைய தீர்ப்பாணை எதற்கும் இணங்க பதிவு செய்வதற்காக முன்னிடப்பட்ட ஆவணங்கள் அனைத்திற்கும் பொருந்துதல் வேண்டும், மற்றும் இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறு இருப்பினும், அந்த ஆவணமானது, அத்தகைய உரிமை வழக்கில் சான்றாகப் பெற்றுக் கொள்ளப்படத்தக்கதாகும்.

## பகுதி XIII

## பதிவு செய்வதற்கான, தேடுவதற்கான மற்றும் படிகளுக்கான கட்டணங்கள்

78. மாநில அரசாங்கம்,— மாநில அரசாங்கத்தினால் நிருணயிக்கப்பட வேண்டிய கட்டணங்கள்.

(அ) ஆவணங்களைப் பதிவு செய்வதற்காக,

(ஆ) பதிவேடுகளைத் தேடுவதற்காக,

(இ) பதிவு செய்வதற்கு முன்போ அல்லது பதிவு செய்யும்போதோ, அல்லது பதிவு செய்ததன் பின்போ காரணங்களின் பதிவுகளின் அல்லது ஆவணங்களின் படிகளைச் செய்வற்காக அல்லது வழங்குவதற்காக,

செலுத்தப்படவேண்டிய கட்டணங்களின், மற்றும்

(ஈ) பிரிவு 30 இன்படி ஒவ்வொரு பதிவிற்காக,

(உ) ஆணைகளைப் பிறப்பிப்பதற்காக,

(ஊ) மொழிபெயப்புகளைக் கோப்பிலிடுவதற்காக,

(எ) தனியார் குடியிருப்பிடத்திற்குச் செல்வதற்காக,

(ஏ) ஆவணங்களைப் பத்திரமான பாதுகாப்பில் வைப்பதற்காக, மற்றும் திருப்பிக் கொடுப்பதற்காக, மற்றும்

(ஐ) இந்தச் சட்டத்தின் நோக்கங்களைச் செல்திறப்படுத்துவதற்குத் தேவையென மாநில அரசாங்கத்திற்குத் தோன்றும் பிற பொருட்பாடுகளுக்காக,

செலுத்தப்படவேண்டிய அதிகப்படியான அல்லது கூடுதலான கட்டணங்களின் அட்டவணை ஒன்றைத் தயாரித்தல் வேண்டும்.

79. அவ்வாறு செலுத்தப்படவேண்டிய கட்டணங்களின் அட்டவணை ஒன்று அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும். மேலும், அதனுடைய படியொன்று, ஆங்கிலத்தில் மற்றும் அந்த மாவட்டத்தின் வட்டார மொழியில், பதிவுசெய்யும் அலுவலகம் ஒவ்வொன்றினாலும், பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்படுதல் வேண்டும். கட்டணங் களைப் பற்றி வெளியிடுதல்.

80. இந்தச் சட்டத்தின்படி ஆவணங்களைப் பதிவு செய்வதற்கான கட்டணங்கள் அனைத்தும், அத்தகைய ஆவணங்களை முன்னிடுவதன்பேரில் செலுத்தப்பட வேண்டியனவாகும். முன்னிடப் படுவதன்பேரில் செலுத்தப்பட வேண்டியன வாகும் கட்டணங்கள்.

## பகுதி XIV

## தண்டனைகள்

கேடுவிளைவிக்கும் நோக்கத்துடன் ஆவணங்களைச் சரியில்லாத முறையில் மேற்குறிப்பிடுதல், மொழிபெயர்த்தல் அல்லது பதிவு செய்தலுக்கான தண்டனை.

81. இந்தச் சட்டத்தின்படி பதவி அமர்த்தப்பட்ட பதிவு செய்யும் அலுவலர் ஒவ்வொருவரும், மற்றும் இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக அவரது அலுவலகத்தில் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ள ஆள் ஒவ்வொருவரும், அதன் வகையங்களின்படி முன்னிடப்பட்ட அல்லது வைப்பீடு செய்யப்பட்ட ஆவணம் எதனையும் மேற்குறிப்பிடும், பார்த்தெழுதும், மொழிபெயர்க்கும் அல்லது பதிவு செய்யும் பொறுப்புச் சுமத்தப்பட்டிருந்து, இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தில் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான கேட்டினை, அவ்வாறு செய்வதன் மூலம் எவர் ஒருவருக்கும் கேட்டினை அவர் பெரும்பாலும் விளைவிக்கலாம் என்று தெரிந்து, சரியில்லாதது என்று அவர் அறிகிற அல்லது நம்புகிற முறையில் அத்தகைய ஆவணத்தை மேற்குறிப்பிட்டால், பார்த்தெழுதினால், மொழிபெயர்த்தால் அல்லது பதிவு செய்தால் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கலாகுமொரு காலஅளவிற்குச் சிறைத்தண்டனை அல்லது பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்து தண்டிக்கப்படத்தக்கவராவார்.

பொய்யான விவர உரைகள் செய்வதற்கும் பொய்யான படிகள் அல்லது மொழிபெயர்ப்பை கொடுத்தலுக்கும் பொய்யான ஆள் மாறாட்டம் மற்றும் குற்ற உடந்தைக்கும் தண்டனை.

82.(அ) இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகையில், செயலாற்றுகிற அலுவலர் எவர் முன்பும், இந்தச் சட்டத்தின்படியான நடவடிக்கை அல்லது விசாரணை எதிலும், பொய்யான விவர உரை எதையும் ஆணை உறுதியின் மீதோ அல்லாமலோ மற்றும் அது பதிவு செய்யப்பட்டிருந்தாலும் அல்லது செய்யப்படாதிருந்தாலும், உட்கருத்துடன் செய்கிற எவராயினும், அல்லது

(ஆ) பிரிவு 19 அல்லது பிரிவு 21இன்படியான நடவடிக்கை எதிலும், ஓர் ஆவணத்தின் பொய்யான படி ஒன்றை அல்லது மொழிபெயர்ப்பு ஒன்றை அல்லது புவிப்படத்தின் அல்லது அமைப்புப்படத்தின் பொய்யான படி ஒன்றை உட்கருத்துடன் பதிவு செய்யும் அலுவலரிடம் கொடுக்கிற எவராயினும், அல்லது

(இ) இந்தச் சட்டத்தின்படியான நடவடிக்கை அல்லது விசாரணை எதிலும் மற்றொருவரைப் போல பொய்யாக ஆள்மாறாட்டம் செய்கிற மற்றும் அத்தகைய புனைந்துகொண்ட பாத்திரத்தில் தோன்றி, ஆவணம் எதனையும் முன்னிடுகிற, அல்லது அழைப்பாணை அல்லது ஆணை எதனையும் பிறப்பிக்கச்செய்கிற எவராயினும், அல்லது

(ஈ) இந்தச் சட்டத்தினால் தண்டிக்கப்படத்தக்கதாகவுள்ள எதற்கும் உடந்தையாயிருக்கிற எவராயினும்,

ஏழாண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனை அல்லது பணத்தண்டம் அல்லது இரண்டு விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

பதிவு செய்யும் அலுவலர் குற்ற வழக்கினைத் தொடரலாம்.

83.(1) தம் அலுவல் முறையில் பதிவு செய்யும் அலுவலர் ஒருவருக்குத் தெரியவருகிற இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல் எதற்குமான குற்ற வழக்கானது, நேர்வுக்கேற்ப, அந்தக் குற்றச்செயல் செய்யப்பட்டிருக்கிற ஆட்சி நிலவரைகளின், மாவட்டத்தின், உள்-மாவட்டத்தின் ஆவணப்பதிவுத்துறைத் தலைவர், பதிவாளர் அல்லது சார்-பதிவாளர் எவரொருவராலும் அல்லது எவரொருவரின் இசைவுடனும் தொடங்கப்படலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்கக் குற்றச்செயல்கள், இரண்டாம் வகுப்புக் குற்றவியல் நடுவர் ஒருவரின் அதிகாரங்களுக்குக் குறையாத அதிகாரங்களைச் செலுத்துகிற நீதிமன்றம் அல்லது அலுவலர் எவராலும் விசாரிக்கப் படத்தக்கனவாகும்.

பதிவுசெய்யும் அலுவலர்கள் பொதுப் பணியாளர்கள் என்று கொள்ளப் பெறுவர்.

84. (1) இந்தச் சட்டத்தின்படி பதவியமர்த்தப்பட்ட பதிவு செய்யும் அலுவலர் ஒவ்வொருவரும், இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பொருளின்படி பொதுப்பணியாளர் ஒருவராகக் கொள்ளப்பெறுவார். 45/1860

(2) அத்தகைய பதிவு செய்யும் அலுவலரால் தகவல் தருவதற்கு வேண்டுறுத்தப்படும்போது, ஆள் ஒவ்வொருவரும், அவ்வாறு தகவல் தருவதற்குச் சட்டப்படி கட்டுப்பட்டவராவார்.

45/1860 (3) இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 228இல் "நீதிமுறை நடவடிக்கை" என்னும் சொற்கள், இந்தச் சட்டத்தின்படியான நடவடிக்கை எதனையும் உள்ளடக்குவதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

## பகுதி XV

### பல்வகை

85. பதிவு செய்யும் அலுவலகம் எதிலும் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திற்கு உரிமை கோரப்படாமல் இருக்கும் (விருப்புறுதி ஆவணம் அல்லாத பிற) ஆவணங்கள் அழிக்கப்படலாம். உரிமை கோரப்படாத ஆவணங்களை அழித்துவிடுதல்.

86. தம் அலுவல் முறையில் நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது மறுக்கப்பட்ட காரணம் எதற்காகவும் பதிவு செய்யும் அலுவலர் எவரும், உரிமை வழக்கு, கோருரிமை, அல்லது கோரிக்கை எதற்கும் கடப்பாடுடையவராகார். தம் அலுவல் முறையில் நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது மறுக்கப்பட்ட எதற்காகவும் பதிவு செய்யும் அலுவலர் கடப்பாடுடையவர் அல்லர்.

87. இந்தச் சட்டத்தை அல்லது ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்பட்ட சட்டம் எதனையும் ஒட்டி, பதிவு செய்யும் அலுவலர் எவராலும் நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட எதுவும், அவருடைய அமர்த்துகையில் அல்லது நடைமுறையில் உள்ள குறைபாடு எதன் காரணமாக மட்டுமே, செல்லாநிலையது என்று கொள்ளப்படுதல் ஆகாது. அவ்வாறு செய்யப்படாத எதுவும் அமர்த்துகையில் அல்லது நடைமுறையில் உள்ள குறைபாட்டினால் செல்லா நிலையதாகாது.

88.(1) இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறு இருப்பினும்:- அரசாங்க அலுவலர்களால் அல்லது குறித்த சில பொதுப் பதவியாளர்களால் எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணங்களைப் பதிவு செய்தல்.

(அ) அரசாங்க அலுவலர் எவரும், அல்லது

(ஆ) தலைமைக் காப்பாட்சியாளர், அரசு பொறுப்புக் கட்டளையர் அல்லது நொடிப்புநிலையரின் சொத்தாட்சி அலுவலர் எவரும், அல்லது

(இ) மாநகர் முதற்குடிமகனார், சொத்துப் பேணுநர் அல்லது உயர்நீதிமன்றப் பதிவாளர், அல்லது

(ஈ) மாநில அரசாங்கத்தால் அதற்கெனப் பிறப்பிக்கப்பட்ட அதிகார முறை அரசிதழில் அறிவிக்கையில் குறித்துரைக்கப்படும் பிற பொதுப்பதவியை அப்போதைக்கு வகிப்பவர்,

தம்முடைய அலுவல் முறையில், தம்மால் அல்லது தம் பெயருக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட முறையாவணம் எதனின் பதிவு தொடர்பான நடவடிக்கை எதிலும், பதிவு செய்யும் அலுவலகம் எதிலும், நேரில் அல்லது முகவர்வழி வருவதோடு அல்லது பிரிவு 55இல் வகை செய்யப்பட்டவாறு கையொப்பமிடுவதோ தேவையாகாது.

(2) உட்பிரிவு (1)இல் குறிக்கப்பட்டுள்ள அரசாங்க அலுவலரால் அல்லது அவர் பெயருக்கு அல்லது அந்த உட்பிரிவில் குறிக்கப்பட்டுள்ள பிற ஆள் எவரால் அல்லது அவர் பெயருக்கு, எழுதிக் கொடுக்கப்பட்ட முறையாவணமானது பிரிவு 69இல் வகுக்கப்பட்ட விதிகளில் வகுத்துரைக்கப்படும் முறையில் பதிவு செய்யப்படுவதற்கு முன்னிடப்படலாம்.

(3) முறையாவணம் எதுவும், இந்தப் பிரிவின்படி பதிவு செய்யப்படுவதற்காக எந்தப் பதிவு செய்யும் அலுவலரிடம் முன்னிடப்பட்டிருக்கிறதோ, அந்தப் பதிவு செய்யும் அலுவலரிடம், தாம் பொருத்தமெனக் கருதுவாராயின், அதற்கு தொடர்பான தகவலுக்காக அரசாங்கச் செயலாளர் எவருக்கும் அல்லது உட்பிரிவு (1)இல் குறிக்கப்பட்ட அரசாங்க அலுவலர் எவருக்கும், அல்லது பிற ஆள் எவருக்கும் குறித்தனுப்பலாம். மற்றும் அது எழுதிக் கொடுக்கப்பட்டது பற்றித் தாம் தெளிவுறக் காண்பதன் பேரில் முறையாவணத்தைப் பதிவு செய்தல் வேண்டும்.

குறித்த சில ஆணையரின் உறுதிச் சான்றுகளின் மற்றும் ஆவணங்களின் படிகள், பதிவு செய்யும் அலுவலர்களுக்கு அனுப்பபடுதல் வேண்டும் மற்றும் கோப்பிலிடப் படுதல் வேண்டும்.

89. (1) நிலமேம்பாட்டுக்கான கடன் சட்டம், 1883 இன்படி கடன் ஒன்றை வழங்கும் அலுவலர் ஒவ்வொருவரும், தம் ஆணையின் படியொன்றை மேம்படுத்தப்பட வேண்டிய நிலம் அல்லது சார்பிணையமாக வழங்கப்பட வேண்டிய நிலம் முழுவதும் அல்லது அதன் பகுதி எதுவும், பதிவு செய்யும் அலுவலர் எவரின் அதிகாரவரம்பின் வட்டார எல்லைகளுக்குள் அமைந்திருக்கிறதோ அதற்கு அனுப்புதல் வேண்டும். மற்றும் அத்தகைய பதிவு செய்யும் அலுவலர், அந்தப் படியினைத் தமது 1ஆம் எண் புத்தகக் கோப்பிலிடுதல் வேண்டும். 19/1883

(2) உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1908 இன்படி நிலையியல் சொத்தின் விற்பனைக்கான உறுதிச்சான்று ஒன்றை வழங்கும் நீதிமன்றம் ஒவ்வொன்றும், அந்த உறுதிச்சான்றில் அடங்கிய நிலையியல் சொத்து முழுவதும் அல்லது அதன் பகுதி எதுவும், பதிவு செய்யும் அலுவலர் எவரின் அதிகார வரம்பின் வட்டார எல்லைகளுக்குள் அமைந்திருக்கிறதோ அந்தப்பதிவு செய்யும் அலுவலருக்கு அந்த உறுதிச்சான்றின் படியொன்றை அனுப்புதல் வேண்டும் மற்றும் அத்தகைய அலுவலர் அந்தப் படியினைத் தமது 1ஆம் எண் புத்தகக் கோப்பிலிடுதல் வேண்டும். 5/1908

(3) வேளாண்மை செய்வோர் கடன் சட்டம், 1884 இன்படி கடன் ஒன்றை வழங்கும் அலுவலர் ஒவ்வொருவரும், கடன் திருப்பிச் செலுத்தப்படுவதற்குப் பிணையமாக, எந்த முறையாணையத்தின்படி நிலையியல் சொத்து அடைமானம் வைக்கப்பட்டிருக்கிறதோ அந்த முறையாவணம் எதனின் படியொன்றையும் மற்றும் அத்தகைய சொத்து எதுவும், கடன் வழங்கும் ஆணையில் அந்த நோக்கத்திற்காக அடைமானம் வைக்கப்பட்டிருந்தால், அந்த ஆணையின்படியொன்றையும், பதிவுசெய்யும் அலுவலர் எவரின் அதிகாரவரம்பின் வட்டார எல்லைகளுக்குள் அவ்வாறு அடைமானம் வைக்கப்பட்ட சொத்து முழுவதும் அல்லது அதன் பகுதி எதுவும் அமைந்திருக்கிறதோ அந்தப் பதிவு செய்யும் அலுவலருக்கு அனுப்புதல் வேண்டும். மற்றும் அத்தகைய பதிவு செய்யும் அலுவலர் அந்தப்படியினை அல்லது, நேர்வுக்கேற்ப, படிகளைத் தமது 1 ஆம் எண் புத்தகக் கோப்பிலிடுதல் வேண்டும். 12/1884

(4) பொது ஏலத்தின் வாயிலாக விற்பனை செய்யப்பட்ட நிலையியல் சொத்தினை விலைக்கு வாங்குபவருக்கு, விற்பனைக்கான உறுதிச்சான்றை வழங்குகிற வருவாய்த்துறை அலுவலர் ஒவ்வொருவரும், உறுதிச்சான்றில் அடங்கியுள்ள சொத்து முழுவதும் அல்லது அதன் பகுதி எதுவும் பதிவு செய்யும் அலுவலர் எவரின் அதிகார வரம்பின் வட்டார எல்லைகளுக்குள் அமைந்திருக்கிறதோ, அந்தப் பதிவுசெய்யும் அலுவலருக்கு உறுதிச் சான்றின்படியொன்றை அனுப்புதல் வேண்டும். மற்றும் அத்தகைய அலுவலர் அந்தப்படியினைத் தமது 1ஆம் எண் புத்தகக் கோப்பிலிடுதல் வேண்டும்.

## சட்ட விலக்களிப்புகள்

அரசாங்கத்தினால் அல்லது அரசாங்கத்திற்கு எழுதிக் கொடுக்கபட்ட குறித்த சில ஆவணங்களுக்கு விலக்களிபபு.

90. (1) இந்தச் சட்டத்தில் அல்லது இந்தியப் பதிவுச் சட்டம், 1877 இல் அல்லது இந்தியப் பதிவுச் சட்டம், 1871 இல் அல்லது ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்பட்ட சட்டம் எதிலும் அடங்கியுள்ள எதுவும், பின்வரும் ஆவணங்கள் அல்லது புவிப்படங்கள் எவையும், பதிவு செய்யப்படவேண்டுமென்று வேண்டுறுத்தப்படுவதாக அல்லது எந்த நேரத்திலும் வேண்டுறுத்தப்பட்டதாகக் கொள்ளப்படுதல் ஆகாது. அதாவது:— 3/1877 8/1871

(அ) நிலவருவாயை அறுதி செய்வதில் அல்லது செய்யப்பட்ட நில வருவாய் அறுதியினைச் சீராய்வு செய்வதில் ஈடுபட்டுள்ள அலுவலர் எவராலும் வழங்கப்பட்ட, பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது சான்றொப்பமிடப்பட்ட மற்றும் அத்தகைய அறுதியிடுதலுக்கான பதிவணங்களின் பகுதியாக அமைகிற ஆவணங்கள்; அல்லது

(ஆ) அரசாங்கத்தின் பொருட்டு நிலம் எதனையும் அளவை செய்கிற அல்லது அதனைச் சீராய்வு செய்வதில் ஈடுபட்டுள்ள அலுவலர் எவராலும் வழங்கப்பட்ட, பெற்றுக் கொள்ளப்பட்ட அல்லது உறுதிச்சான்றளிக்கப்பட்ட மற்றும் அத்தகைய நில அளவைப் பதிவணங்களின் பகுதியாக அமைகிற ஆவணங்கள் மற்றும் புகைப்படங்கள்; அல்லது

(இ) சிற்றூரில் பதிவணங்களைத் தயாரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள பட்வாரிகளால் அல்லது பிற அலுவலர்களால் வருவாய்த்துறை அலுவலகம் எதிலும் அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதன் படியும் குறிப்பிட்ட காலங்களில் முன்னிடப்படுகிற ஆவணங்கள்;

(ஈ) அரசாங்கத்தினால் மானியங்களாக அளிக்கப்பட்ட அல்லது உரிமையளிப்புகளாகக் கொடுக்கப்பட்ட நிலம் அல்லது நிலத்திலுள்ள உரித்தம் எதுவுமாகப் புலப்படுகிற அல்லது எதற்கும் சான்றாகிற பட்டயங்கள்; இனாம், மூல ஆவணங்கள் மற்றும் பிற ஆவணங்கள்;

5/1879 (உ) பம்பாய் நிலவருவாய்த் தொகுப்புச் சட்டம், 1879இன் பிரிவு 74அல்லது 76இன்படி கையுடைமையாளர்களின் கையுடைமையில் இருந்து அல்லது உரிமைமாற்றம் செய்யப்பட்ட அத்தகைய நிலத்தை வைத்திருப்பவர்கள் விட்டுவிடுவதற்காகக் கொடுக்கப்பட்ட அறிவிப்புகள். பம்பாய் சட்டம்

(2) அத்தகைய ஆவணங்கள் அனைத்தும் மற்றும் புகைப்படங்களும், பிரிவு 48 மற்றும் 49இன் நோக்கங்களுக்காக, இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கிணங்க பதிவு செய்யப்பட்டதாகவும் பதிவு செய்யப்படவிருப்பதாகவும் கொள்ளப்படுதல் வேண்டும்.

91. (1) மாநில அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக இதற்கென வகுத்துரைக்கும் அத்தகைய விதிகள் மற்றும் அத்தகைய கட்டணங்களை முன்னதாகச் செலுத்துவதற்கு உட்பட்டு பிரிவு 90இன் கூறுகள் (அ), (ஆ), (இ) மற்றும் (உ)இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் புவிப் படங்கள் அனைத்தையும், மற்றும் கூறு (ஈ) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் பதிவேடுகள் அனைத்தையும், பார்வையிடுவதற்கு விண்ணப்பிக்கும் ஆள் எவருக்கும் பார்வையிட உரிமை உண்டு. மற்றும் மேற்சொன்னவற்றிற்கு உட்பட்டு அத்தகைய ஆவணங்களின் படிகள் அத்தகைய படிகளுக்காக விண்ணப்பிக்கிற ஆட்கள் அனைவருக்கும் கொடுக்கப்படுதல் வேண்டும். அத்தகைய ஆவணங்களைப் பார்வையிடுதலும் அவற்றின் படிகளும்.

(2) இந்தப் பிரிவின்படி வகுத்துரைக்கப்பட்ட அல்லது பிரிவு 69இன்படி வகுக்கப்பட்ட விதி ஒவ்வொன்றும், அது வகுக்கப்பட்டவுடன், கூடிய விரைவில், மாநில சட்டமன்றத்தின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்.

92. [பர்மிய பதிவு செய்யும் விதிகள் உறுதிப்படுத்தப்பட்டன.] (இந்திய அரசாங்க (இந்தியச் சட்டங்களின் இணக்க) ஆணையினால் நீக்கறவு செய்யப்பட்டது.

## நீக்கறவுகள்

1/1938 93. [நீக்கறவுகள்] நீக்கறவு செய்தல் சட்டம், 1938 இன் பிரிவு 2இனாலும், இணைப்புப் பட்டியலினாலும் நீக்கறவுசெய்யப்பட்டது. நீக்கறவுகள்.

இணைப்புப்பட்டியல்—[செய்சட்டங்களின் நீக்கறவு.] மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 2இனாலும், இணைப்புப்பட்டியலினாலும் நீக்கறவு செய்யப்பட்டது.